ஜநவிநோதிநி.

இல. 7, 8.] {ஜூலைமீ / ஆகஸ்டுமீ} 1884. [புஸ்த. XV.

உறைபனி அடர்ந்த நாடுகள்.

நாம் வாசமாயிருக்கிற இப்பூமியின் மேற்புறமானது சூரியனுடைய கதியினாலும் கதியின்மையாலும் மூன்றுபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. சூரியன் எப்போதும் தலைக்குநேர் மேலாக வட்டமிட்டு வருகின்ற பூமத்தியபாகததிற்கு உஷ்ணபூமியெனவும், சூரியனதுவெப்பம் அத்தனை உக்கிரமில்லாமல் ஒருவாறாக உறைக்கின்ற அம்மத்தியபாகத்தை அடுத்துள்ள தேசங்களுக்குச் சமசீதோஷ்ணபூமியெனவும், சூரியகிரணமே அதிகமாய்ப் படாமல் வடகோடி தென்கோடிகளில் துருவத்தை அடுத்துள்ளவிடங்களுக்குச் சீதபூமியெனவும் பெயர். உஷ்ணபூமியில் தண்ணீர் மிகுதியாய்க் கிடைப்பது அரிது; அது காரணமாக அவ்விடத்தில் மனிதர் மாடு மிருகம் முதலிய ஜீவவர்க்கங்களாயினும் புல் பூண்டு செடி கொடி முதலான விருக்ஷவர்க்கங்களாயினும் மிகுதியாகக் காணக் கிடைக்கமாட்டா.

சமசீதோஷ்ணபூமியில் பிராணிகளுக்கும் மரம் செடி பயிர்பச்சைமுதலிய விருக்ஷவகைகளுக்கும் போதுமானவளவு வெப்பமும் குளிர்ச்சியும் சரியாய் அமைந்திருக்கின்றன. ஆதலால் அவ்விடத்தில், எங்கேபார்த்தாலும் பூஞ்செடிகளும் பழச்செடிகளும் கண்களுக்கு இனிய காட்சியளிக்க, குயில்முதலிய பற்பலஜாதிப பறவைகள் தமது தோற்றத்தினாலும் தொனியினாலும் கண் காது இரண்டு இந்திரியங்களுக்கும் ஆனந்தமுண்டாக்க, மன்னுயிர்கள் மகிழ்ச்சி அடைந்து சவுக்கியமாய் வாழ்ந்திருக்கின்றார்கள்.

சீதமண்டலத்தில் எக்காலத்திலும் சூரியகாந்தியில்லாமல் குளிர்ச்சி மிகுந்திருப்பதால், மனிதர்களுக்காயினும் மிருகங்களுக்காயினும் அது வாஸயோக்கியமானவிடம அன்று. சிலர் நினைத்திருக்கின்றபடி அது முற்றும் பாழ்நிலமாயிராவிடினும், குளிர்பூமிக்கே யுரி

யவையான கலைமான்முதலிய சில மிருகங்களும் சில பூண்டுகளும் பனிக்கட்டிகளும் தவிர மற்றொன்றும அங்கே காணக்கிடையாது. அந்தப் பனிக்கட்டி நிறைந்த நாடுகளில் கப்பலேறிக் கடல்யாத்திரை செய்வது மிகவும் அபாயமானது. அந்தக் கடல்களில் அங்கங்கே தண்ணீர் குளிர்ச்சியால் உறைந்துபோய்ப் பாறைபாறையாய் மிதந்துகொண்டேயிருக்கும். வானத்தினின்றும் பெய்கின்ற பனியினாலும், கடலிலேயே பனிக்கட்டிகள் ஒன்றோடொன்று நெருங்குவதாலும் சிறியகட்டிகள் பருத்துப் பருவதாகாரமாய்ப்போவதுண்டு. அவை அங்கங்கே கடலில் திட்டுத்திட்டாய்த் தரைவரைக்கும் உறைந்த நிலம்போல நிலைபெற்றிருக்கும். அவற்றின்மேல் அநேகர் காலால் நடந்தும் வண்டியின்மேல ஏறிக்கொண்டும் சஞ்சாரம் செய்வதுண்டு. அவ்வுறைபனிப்பாறைகள் மிகவும் வலிவுள்ளவைகள். அவற்றுள் அநேகம் எடையில் ஆயிரம்கோடி டன்னுக்குக் குறைந்திருப்பதில்லை. வடசமுத்திரங்களில் செல்லுகின்ற கப்பல்களுக்கு நேரிடும அபாயமெல்லாம் வெகுவாய் இவைகளாலேதாம். பனிக்கட்டிகள் சமீபத்தில் இல்லையென நினைந்துக் கப்பலைச் செலுத்தினாலும், நெடுந்தூரத்திலுள்ள பனிப்பாறை வெகு விரைவாக மிதந்து ஓடிவரும். அப்போது அதன்வழியில் மரக்கலம் அகப்பட்டுக்கொள்ளுமாயின், அவ்வளவோடு அது அழிந்துபோனதுதான். அக்கப்பல் எத்தனை உறுதியாகத்தான் இருக்கட்டும், அதன் பக்கங்கள் இரண்டுமூன்றடியளவு பருமனுள்ளதாகத்தான் இருக்கட்டும், ஒன்றும் அதன்முன் உபயோகப்படாது. ஆயின் இதில் ஒரு நன்மையுண்டு: இவ்வுறை பனிக்கட்டியினால் கப்பலுக்குச சேதம் நேரிட்டாலும் கப்பலில் செல்லும் மனிதர்களுக்கு அதிகமாய்ச் சேதம் நேரிடாது; தெய்வச்செயலால் ஒருவேளை கப்பலுடைந்துபோமாயின் அதன்மேல் பிரயாணம் செய்கின்றவர்கள் அத்தருணங்கண்டு உடனே தாவிக்குதித்துப் பனிக்கட்டியின்மேல் ஏறிக்கொண்டு உயிரைக் காத்துக்கொள்ளலாம். அதுவன்றி மற்றோரிடத்தில் கப்பல் உடைந்தால் கப்பலோடுகப்பலாய் மன்னுயிர்களும் மூழ்கவேண்டுவதுதானே. ஓரிடத்தில் நிலையாயிருக்கின்ற பனிககட்டி அசைந்தோடுவதற்குக் காரணம் கடல்வெள்ளம், காற்று, ஒருகட்டி மற்றொன்றின்மேல் வந்து தாக்குவது முதலியவையாம். இத்தன்மையான உறைபனிக்கட்டிகளின் இடையே கப்பல்நிற்கின்ற வடகடலின் காட்சியை இப்புத்தகத்தைப் படிப்பவர்களும் கண்டு களிக்கும்படி அதைக் குறிக்கும் ஓர் படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கின்றோம்.

உனக்கு வைசூரி குத்தியதெப்போ?

தங்கம்மாள் என்னும் ஒருத்தி ஒருநாள் கமலம்மாள் வீட்டுக்குச் சென்றாள். அப்போது அவளைக் கண்டு, அம்மா உன் வீட்டு வாயிலில என் எதிரே ஒரு பெண்போனாளே, அவள் யார்? எனக்குத் தெரியவில்லையே என்று கேட்க, அதன்மேல் அவ்விருவருக்கும் உண்டான சம்பாஷணையாவது:—

கமலம்மாள்: இந்தப் பெண் உனக்குத் தெரியாதா? என் மருமகளல்லவா? நீ முன் இரண்டு மூன்றுதரம் இவளைப் பார்த்திருக்கிறாயே!

தங்கம்மாள்: என்ன! சென்றவருஷம் நான் வந்திருந்தபோது நீ தலைவாரிச் சிங்காரித்துக்கொண்டிருந்தாயே அந்தப் பெண்ணா? அதின் அழகைப் பார்க்கப் பதினாயிரம் கண் வேண்டுமே.

கம. ஆம், அந்தப் பெண்தான். அம்மைவார்த்து முகச்சாயல் மாறிப்போயிருப்பதால உனக்கு ஒருவேளை அடையாளம் தெரியவில்லையோ என்னவோ? அம்மைவார்தது இதனுடம்பு இப்படியாகி விட்டது.

தங். ஆம் அம்மா! முன் பார்த்த முகச்சாயல் இப்போது சிறிதளவும் இல்லை. கனவுகண்டதுபோல் என்றைக்காவது பார்த்த முகமாயிருக்கலாமோவென்று கொஞ்சம் சந்தேகம் உண்டாயிற்று; அனதுபற்றியே உன்னைக் கேட்கலானேன். ஐயோ பாவம்! எவ்வளவு அழகாயிருந்த பெண் எவ்வளவு விகாரமாய்ப் போயிற்று! நல்லது இந்தச சிறுமிக்கு வைசூரிகண்டது எப்போ?

கம. சிலமாதங்களுக்குமுனபுதான் கண்டதாம். இப்பொழுது வைசூரி எங்கும் மும்முரமாய் இருக்கிறதென்று சொல்லிக்கொள்கிறார்கள்.

தங். ஆம், அச்செய்தி எனக்கும் தெரியும். வைசூரி காணவொட்டாமல் எல்லோரும் அதற்குத் தக்க முன்ஜாக்கிரதை செய்துகொள்ளவேண்டியது அவசியம். பின்னும பல சங்கதிகளிருந்தாலும் முக்கியமாய் இவ்விஷயத்தைப்பற்றி உன்னுடன் பேசவேண்டுமென்றே இன்று நான் இவ்விடம் வநதது. உனக்கும் உன் குழந்தைகளுக்கும் அம்மை குததியிருக்கிறதா இல்லையா?

கம. இல்லை; எனக்கும் இல்லை, என் குழந்தைகளுக்கும் இல்லை.

தங். ஆ! ஆ! ஏன் இப்படி நீங்கள் சிறிதும் முன்யோசனை அற்றவராயிருக்கிறீர்கள்?

கம. நான் என்னசெய்வேன் அம்மா! இப்பெண்ணினுடைய முகத்தைப் பார்ததபோது இதைப்பற்றி நானும என் தந்தையுடன் சொன்னேன்; எங்களையெல்லாம் அருமையாய் எடுத்து வளர்த்த

வள் எங்கள் தாய். அம்மை குத்துவதென்றால் அவளுக்குச் சிறிதும் சரிப்படுவதில்லை.

தங். ஏன் அப்படி?

கம. ஏனோ எனக்குச் செம்மையாய்த் தெரியாதம்மா?

தங். வியாதியை உற்பத்திசெய்தவர் சுவாமியேயானாலும், அதை வராமல் தடுப்பதற்கும், வந்தபின் சாந்தப்படுத்துவதற்கும் வேண்டிய உபாயங்களையும் கூடவே அவர் கற்பித்திருக்கிறார். நாம் நமது மூடத்தனததாலும், முரட்டுத்தனத்தாலும், பயத்தாலும் அவற்றை உபேக்ஷைசெய்து வியாதிபிடித்து வருத்தப்படுகிறோம்.

கம. அதென்னவோ நான் அறியேன். நாங்கள் சிறுவர்களாய் இருந்ததுமுதற்கொண்டே, அம்மைகுத்துவதனால் உபத்திரவமேயொழிய உபகாரமில்லையென்று கண்டு எங்கள் தாயார் அது ஒரு வீணானகாரியமென்று அதைப் பகைத்திருக்கிறாள்.

தங். அதெப்படி அம்மா?

கம. அப்போ நாங்கள் ஒரு சிறு கிராமத்தில் இருந்தோம். அங்கே சமீபத்தில் வைத்தியர் ஒருவரும் கிடையாது; உன்னைப்போலவே கிழவி ஒருத்தி இருந்தாள். யாருக்காயினும் உடம்பில் ஏதாவது விசேஷமானால் அவளுக்குத்தான் சொல்லியனுப்புவார்கள். அவள் எல்லோரிடததிலும் மிகப் பிரீதியாய் வைத்தியம் பார்த்துவருவாள். இப்படியிருக்கப் புதிதாய் அம்மைகுத்துவதொன்று தலைப்பட்டது தெரிந்து அவள் அண்டை அயல் ஊர்களிலுள்ளவர்களை வரவழைத்து அம்மைகுததுவதின் உபயோகம் இப்படிப்பட்டதென்று அவர்களுக்குத் தெரியச்சொல்லி, குழந்தைகளோடு யாவரும் தன் வீட்டுக்கு வந்து அம்மைகுத்திக்கொண்டு போகவேண்டுமென்று சொன்னாள். என் தாயாருடனும் அப்படியே சொன்னாளாயினும் இவள் அதற்குடன்படவில்லை; மற்றவர்களெல்லாம் குத்திக்கொள்ளட்டும், என்னவாகிறதோ பாரப்போமென்றிருந்தாள். அந்தமட்டும் அவள் நினைத்தது நல்லதாயிற்று. அம்மைகுத்திக்கொண்டவர்கள் பட்டபாடு இவ்வளவு அவ்வளவன்று. சிலர்க்குக் கை தூணாய் வீங்கிப்போயிற்று; சிலர்க்கு உடம்பெல்லாம் புண்ணாய்ப்போய் விட்டது; சிலர் பலமாதங்கள் வரையில் உடம்பு சொஸ்தமாகாமல் வருத்தப்பட்டார்கள். அவைகளைப்பார்க்கவே, யானை தன் தலைமேல் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளுவதுபோல அம்மைகுத்திக்கொண்டு வழியேபோகிற விதிப்பயனை விலைக்குவாங்காமல் தப்பினோமே என்று என் தாய் மிக்க சந்தோஷப்பட்டாள்.

தங். என்ன? இப்படிகூட நினைக்கலாமா. அதெல்லாம் வைத்தியருடைய தெரியாமையேயன்றி வேறல்ல; தகுந்தகாலத்தில் பாலெடுத்துத் தக்கபடி குததியிருந்தால் அப்படியெல்லாம் நேர்ந்திராது.

கம. ஆம், அது மெய்தான்; அந்த வைத்தியச்சிகூட அப்படிதான் சொன்னாள். இந்தக் கதையைச் சொல்வதினால் என்னபயன்; பிள்ளைகள் கைப்புண்ணுக்குப் பரிகாரமாயிற்றா?

தங். அது இல்லை, மெய்தான். அப்படி எப்போதோ ஒரு தடவை தவறிப்போனால் அவ்வண்ணமே எப்போதும் இருக்குமென்று நினைக்கலாமா? நீ சொல்லுகிறகாலத்தில் அம்மை குத்துகிற வழி சரியாய்க் கண்டறியப்படவில்லை. வைசூரிகுத்தினால் மறுபடி அம்மை காணாதென்பது கண்டுபிடித்துச் சொற்பகாலந்தான் ஆயிற்று.

கம. அப்படியா?

தங். ஆம், அறுபதுவருஷத்திற்குமுன் இங்கிலாந்திலேயே இது இப்படிப்பட்டதென்று ஒருவர்க்கும் தெரியாது. அதைக் கண்டறிந்த வழி விசித்திரமானது. நமக்குக் கடவுள் அளித்திருக்கிற ஆலோசிக்குந்திறமையை உபயோகிக்கவேண்டிய மாதிரிக்கு இது ஒரு பெரிய உதாரணமாயிருக்கின்றது. அவ்வண்ணமே நாமெல்லோரும் செய்யமுயன்றால் இப்போதிருப்பதைப்பார்க்கிலும் இன்னும் எத்தனையோபங்கு அதிகமாய் ஒருவர்க்கொருவர் உபயோகமுள்ளவர்களாய் இருக்கலாம்.

கம. நீ சொல்வது உண்மைதான். உலகத்தில் கூர்ந்துபார்க்கும் திறமுடையவனே கனமுள்ளவனாகிறான்; அதில்லாவிட்டால் ஒன்றுமில்லை.

தங். அதற்குக் கேட்பானேன்! அம்மைகுத்துவதைக் கண்டறிந்த ஜென்னர் என்பவர் உலகத்திற்கெல்லாம் மகோபகாரியானதற்குக் காரணமென்ன? தான் பார்த்தவிஷயத்தை மிகவும் நுட்பமாய்ப் பலவாறு யோசனைசெய்ததுதானே. அவர் சிறுபையனாயிருக்கும்போது, அதாவது நூறுவருஷங்களுக்குமுன்னே, இவ்வுலகத்தில் வைசூரிசெய்துவந்த கொடுமை இவ்வளவு அவ்வளவென்று சொல்லிமுடியாது. நம் மூதாதைகளைப்போல வைசூரியில் நாம் அத்தனை அவதிப்படாமல் சவுக்கியமடைந்திருப்பதற்காக அவரிடத்தில் எவ்வளவோ நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும். முற்காலத்தில் வைசூரி ஊரூராய் நாசமாக்கிக்கொண்டிருந்தது. இரண்டொருவரை உயிரோடு மிகுத்தினாலும் அவர்களை மிகவும் குரூபியாக்கி, இப்படி உருக்குலைந்த உடம்பு பெற்றிருப்பதினும் உயிர்போனாலும் உத்தமமேயென்று நினைக்கும்படியாகச் செய்துவிடும். இவ்வாறெல்லாம் நோகாதபடி அம்மைகுத்தும் உபாயம் கண்டுபிடித்தது நமக்கு ஒரு பெரும்பாக்கியமேயன்றி வேறல்ல. பிள்ளைகளுக்கு இளம்பருவத்திலேயே அம்மைகுத்திவிட்டால் நீ சொல்லுகிற தீமையொன்றும் உண்டாகாது; பிறகு அவர்களுக்கு வைசூரியும் காணாது. அப்படியும் அந்த வியாதி காணுமாயின,

அது வைத்தியருடைய தெரியாமையேயன்றி அம்மைகுத்துவதின் குற்றமல்ல.

கம. நல்லது. ஜென்னர் என்கிற வைத்தியர் இந்த உபாயத்தை எவ்வாறு கண்டுபிடித்தார்? அதைக் கொஞ்சம் கேட்க விரும்புகிறேன்.

தங். சொல்லுகிறேன் கேள்: அம்மைகுத்துவதைப்பற்றிய விசாரம் இங்கிலாந்தில் அதிகமாயிருக்கும்போது ஜென்னர் அங்கே வைத்தியத்தொழில் கற்றுக்கொண்டிருந்தார். ஒருநாள் அவர் சில நோயாளிகளைப் பார்த்துவிட்டு ஒரு புலத்துவழியாய்த் திரும்பிவரும்படி நேரிட்டது. அப்புலத்தில் சில பெண்கள் பசுக்களைப் பால் கறந்துகொண்டிருந்தனர். அவர்களுள் ஒருத்தியினுடைய அண்டைவீட்டில் ஒருத்திக்கு வைசூரிகண்டிருந்தது. அது எப்படியிருக்கிறதென்று விசாரிக்கும்படி ஜென்னர் அவளுடன் பேசப்போனார். அப்பெண் அவர் கேட்ட கேள்விக்கு விடைகொடுத்து உடனே, "என்னைப்போல் அந்தப் பெண் இப்பசுக்களைப் பால்கறந்திருப்பாளாயின் அவளுக்கு ஒருபோதும் இந்த நோய் கண்டிராது" என்றாள்.

ஜென்னர்: ஒருபோதும் கண்டிராதா? அதென்ன? நீ சொல்வது இன்னதென்று எனக்குப் புலப்படவில்லையே!

பெண்: ஏன் புலப்படவில்லை: இதோ என் கையிலிருக்கிற வடுக்களைப்பாரும். இந்தமாதிரி வடுவுள்ளவர்களுக்கு வைசூரி வராது.

ஜென்னர்: இந்த வடுக்கள் எப்படி உண்டாயின?

பெண்: இந்த வடுக்களைப்போலவே சில பசுக்களுக்கு முலையில் புள்ளிகளிருக்கின்றன. அந்த முலையைப் பிடித்துப் பால்கறந்தால் அது நமது கையில் தொத்துகிறது. முதலில் தொத்தும்போது அது மிகுந்த வருத்தமுண்டாக்குகிறதானாலும், பிற்பாடு வைசூரி அவர்களை எட்டிப்பார்ப்பதேயில்லையென்றால் அது மிகவும் சந்தோஷமல்லவா? என்றாள்.

அவள் சொல்லியதைக் கேட்டு ஜென்னர் அவளுக்கு மறுமொழி ஒன்றும் பகராமல் அதைப்பற்றிச் சிந்தித்தவண்ணமாயே தன்னிடத்திற்குச் சென்றார். இப்போது அவர் கண்ணால் ஒரு விஷயத்தைக் கண்டார்; இனி அதைப்பற்றிக் கூர்மையாய் ஆலோசிக்கவேண்டும்: இதென்ன, யாரோ ஒரு பெண் உண்மைதெரியாமல் தாறுமாறாய்ப் பிதற்றிய பிதற்றலா? அல்லது இது இப்பிரபஞ்சத்தில் கடவுள் ஏற்படுத்திய உண்மையான பதார்த்த தத்துவங்களுள் ஒன்றா? என்பதை இப்பொழுது ஆய்ந்தறியவேண்டும். வேறு வேலையில்லாமல் இவ்விஷயத்திலேயே தன் சிந்தையெல்லாம் ஜென்னர் செலுத்திவிட்டார். இதற்காகவே தன் உயிரையும் உடலையும் அறுதியாய் ஒப்புவித்துவிட்டார் என்றாலும் அதற்குத் தகும். ஆயினும் கண்டவர்களெல்லாம் அவரைப் பரிகாசம்பண்ணி நகைக்

கலானார்கள். தான் கண்டுபிடிக்கக்கருதிய இவ்விஷயத்தைச் சில சிறந்த பண்டிதர்களுடன் அவர் எடுத்துச்சொல்ல, அவர்களும அது கேட்டு நகைத்து, கோமாரி என்னும இப்படிப்பட்ட வியாதி மாடுகளுக்குக் காண்கிறதென்று நாங்கள் முன்னமே கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வியாதி தொடர்ந்த மனிதர்க்கு மறுபடி வைசூரி காண்பதில்லையென்பது மூடர்களுடைய நினைப்பேயன்றி உண்மையல்ல; அதில் ஒரு நன்மையுமில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

ஆனாலும் ஜென்னர் அவர்களுக்கும் ஒன்றும் பதில் உரைக்கவில்லை. யாருடைய கொள்கை உண்மையோ கண்டறியவேண்டுமென்று முன்னிலும் அதிக ஊக்கமாய் அவ்விஷயத்தில் உழைக்க ஆரம்பித்தார். அதற்காக முதலில் அவர் செய்த காரியம் என்னவெனில், பால்காரப்பெண்களுள் சிலரை அழைத்து நீங்கள் வைசூரி குத்திக்கொள்கிறீர்களாவென்று கேட்டார்.

கம. அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்வார்களா? மாட்டார்களே.

தங். அப்படியில்லை. ஜென்னர் மிகவும் நல்லவர் என்றும் புத்திசாலியென்றும அவருடைய பிரசித்தி எங்கும் அதிகமாய்ப் பரவியிருந்ததால், அப்படியே ஆகட்டுமென்று சிலர் அதற்கு உடன்பட்டார்கள். பால்கறக்கும் பெண்களின் கையிலிருந்த கொப்புளத்திலிருந்து பாலெடுத்து அப்பெண்களுக்குக் குத்தினார். ஆயினும அது எப்படியாகுமோவென்று அவர் மனம் பதைத்துக்கொண்டேயிருந்தது. கடைசியில் அவர் பக்கம் ஜயமாயிற்று; அம்மைகுத்தியது சில நாளில் சொஸ்தமாகிப் பின்பு அவர்களுக்கு வைசூரி காணவேயில்லை. ஆனாலும தான் ஜயம்பெற்ற இந்தச் சந்தோஷ சமாசாரத்தை அவர் பிரசித்தப்படுத்தியபோது அதை ஒருவரும் கொண்டாடாமல், இது *காகதாளி நியாயமாய் நேர்ந்ததேயன்றி இதில் இவருடைய சாமர்த்தியம் ஒன்றுமில்லையென்று அலக்ஷியஞ்செய்துவிட்டார்கள். ஒருவனுடைய உற்சாகத்தையழிக்க இதைவிட வேறென்னவேண்டும்! இது அவர் மனதை மிகவும் வருத்தியதாயினும் அதனாலும ஊக்கத்தைக் கைவிடாமல் பின்னும் பாடுபட ஆரம்பித்தார். பிறகு ஒரு பெண்ணுக்கு அம்மைகுத்தினார். ஐயோ! அவர் குத்திய ஒரு வாரத்திற்குள்ளே அவளுக்கு அபாரமாய் அம்மைநோய் கண்டது. வாய்மெல்லுகிற மாமியாருக்கு ஒருவாய் அவலும் அகப்பட்டாதாம் என்பதுபோல், அவரை வீணே இகழ்ந்துகொண்டிருந்தவர்களுக்கு இது ஒரு பெரிய ஆதாரமாயிற்று. "இதோ பார்த்தீரா; இந்த மருந்தை நீதான் மெச்சவேண்டும்! எவ்வளவு அருமையான பொருள் கண்டுபிடித்தீர்"

* காகதாளி நியாயமாவது, காக்கையேறியதும் பனம்பழம் உதிர்ந்ததும்போல ஒன்று காரணமாகாமல் தற்செயலாய் அமைவது. காகம்=காக்கை, தாளி=பனம்பழம்.

என்று இப்படிப் பலவாறு அவருடைய விரோதிகளெல்லாம் இகழ ஆரம்பித்தார்கள்.

யார் என்னசெய்தாலும் அவர் தாம் பிடித்தபிடியை விடவில்லை; நேரிட்ட இடையூறுகளையெல்லாம் பொறுமையாய்ப் பொறுத்திருந்து விடாமுயற்சியாய்ப் பாடுபட்டு அதன் உண்மை இத்தன்மையதெனக் கண்டறிந்து உலகத்துக்கெல்லாம் மகோபகாரியாயினார்.

கம. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்கிறார்களல்லவா? கஷ்டப்பட்டால் கூடாதகாரியமும் கைகூடும். நல்லது அவர் கண்டறிந்த உண்மையென்ன?

தங். அவர் கடைசியாய்க் கண்டறிந்ததென்னவெனின், ஏதோ சிலகாலத்திலேதான் பசுவின் முலையிலுள்ள வைசூரிப்பால் பக்குவமாகின்றது; அத்தருணத்திலே அதில் ஒரு துளியெடுத்து மனிதருடம்பில் சிறிது மேல்தோலைக் கீறி அந்த ரந்திரத்தில் குத்தினால், அந்தத் துளி உடம்போடு கலந்து மறுபடி வைசூரிவியாதி காணாதபடி காக்கின்றது என்பதாம்.

கம. அம்மா இது உனக்கு உண்மையெனத் தோன்றுகிறதா?

தங். எது? ஜென்னருடைய விருத்தாந்தமா?

கம. அல்ல, வைசூரி குத்திவிட்டால் மறுபடி அந்த வியாதி காணாதென்பது.

தங். அது உண்மையென்பதற்குச் சந்தேகமென்ன? என்மட்டில் அணுவளவும் சந்தேகமில்லை. கடவுள் எப்போது வியாதியைக் கற்பித்தாரோ அப்போதே அதை விலக்கவேண்டிய வழிகளையும் கற்பிதிருக்கிறார். அவை ஒருபோதும் வீணாகமாட்டா. நமது அறியாமையாலும் தவறுதலாலுமே பிசகு நேரிடுகின்றது. இப்பொழுது நீ சொன்ன விஷயத்தில் வைத்தியா தக்க தருணமறிந்து பால் எடுத்துக் குத்தாமையாலே நேரிட்ட கெடுதிகளேயன்றி வேறல்ல. இந்தத் தவறு இபபோதும் சில சமயங்களில நேரிட்டிருந்த வருத்தமுண்டாக்குகின்றது. சிலவருஷங்களுக்குமுன்னே இவவண்ணமே என் புருஷனுக்கு வைசூரி குத்தினார்கள். பால் செவ்வையான பாலன்று; அதனால் அவர் பலமாதங்கள்வரையில் படாதபாடெல்லாம் பட்டார். இதைக்கண்டு வைசூரிகுத்துவது வீணென்று நினைக்கலாமா? ஜென்னர் நேராய்த் தாமே வைசூரி குத்தும்போதும் இரண்டொருவர்க்கு இப்படித்தான் தவறிப்போனதாய்க் கேள்வி. இவையெல்லாம் மனிதர் அறியாமையேயன்றி மருந்தின் தோஷமன்று. இரண்டொருவர்க்குத் தவறிப்போனாலும் பதினாயிரம்பேருக்குக் குணமாயிருக்கிறதல்லவா?

கம. ஆம், நீ சொல்வது சரிதான், வைசூரிகுத்தியவர்களுக்குப் பிறகு அந்நோய் காண்பதில்லையென்கிறாய். இப்பொழுது

எங்கேபார்த்தாலும் வைசூரியென்று பெருங்கூச்சலாயிருக்கிறதே, இதற்கு என்னகாரணம்?

தங். இதைப்பற்றிப் பலபேர் பலவிதமாய் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன்: இதற்கு முக்கியமாய் இரண்டுகாரணமுண்டு,—வைசூரி ஒரேதரம் குத்தினால் போதாது, பலதரம் குத்தவேண்டும்; பால அப்பப்போ புதிதாய் எடுத்துக் குத்தவேண்டும். இப்படிச் செய்யாமையாலே குத்தியவர்களுக்கும் அந்நோய் காண்கின்றது. அம்மைகுத்துகிற பால் உடம்பில் நெடுநாள நிற்பதில்லையென அநுபவத்தால தெரிகிறதாகையால் மறுபடியும் குத்தவேண்டுமெனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நான் சிறுபெண்ணாயிருக்கையில் எனக்கு முதலில் ஒருதரம் வைசூரி குத்தினார்கள்; அப்பொழுது நன்றாய்க கொப்புளித்து நீர்க்கொள்ளவில்லை. மறுபடியும் குத்தினார்கள்; அப்பொழுதும கொப்புளிக்கவில்லை. மூன்றாந்தரம் குத்தினார்கள்; அப்பொழுதுதான் நன்றாய்க் கொப்புளித்தது. அதுகண்டு அந்த வைத்தியர் இனி இப்பெண்ணுக்கு ஒருபோதும் வைசூரி குத்தவேண்டியதில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லிவிட்டார். அவா சொல்லியபடியே மறுபடி அந்நோய் எனக்குக் காணவில்லை; ஆயினும் எது எப்படியாகுமோவென்று சிலநாளைக்குமுன் நான் பின்னும ஒருதரம் குத்திக்கொண்டேன். எப்பொழுதாயினும் ஒருகால் வைசூரி குத்திக்கொண்டால் அதுவே தங்கள் வாழ்நாளுக்குப போதுமானதென்று அநேகர் அவ்வளவோடு சும்மா இருந்துவிடுகிறாகள். அதனாலேதான் வைசூரியென்கிற கொள்ளைநோய் இப்போதும் விசேஷமாய்ப் பரவுகின்றது. ஏதோ சில தேகங்களுக்கு ஒருதரமே போதுமானதாயிருபபினும் மற்றத் தேகங்களுக்குப் போதாது.

கம. ஆயின் மறுபடி வைசூரிகுத்தவேண்டுமென்பதற்குக் குறியேதாவதுண்டா?

தங். உண்டு, ஆயினும் இன்னதென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை; எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகிறேன்: சிறுபிராயத்தில் எனக்குக் குத்தின வடு கையில் வெகுநாள் அப்படியேதான் இருந்தது; சிலநாளைக்குமுன் பாாத்தபோது அதன் அடையாளமே இல்லாமல் மறைந்துபோயிற்று. வடுதெரிந்துகொண்டிருந்தபோதே பதினைந்துவருஷத்துக்குமுன் ஒருதரம் நான் வைசூரி குத்திக்கொண்டேன், அது நீர்க்கொளளவேயில்லை; சிலநாளைக்குமுன் குத்திக்கொண்டபோது நன்றாய் நீர்க்கொண்டது. இதனாலேயே மறுபடி குத்திக்கொள்வதற்கு வடு மறைந்துபோவதே காரணமென்று சொல்லததுணியேன். ஆயினும் வடு மறைந்தவுடனே மறுபடி குத்திக்கொள்வது மிகவும் உத்தமமானது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கம. நீ சொல்வதென்ன? எப்போதும் அம்மைகுத்திய புண் ஆறுமலிருக்கவேண்டுமென்கிருயா என்ன?

தங். அப்படி நான் ஒருபோதும் சொல்லவில்லை; வடுமாத்திரம் தெரிந்துகொண்டிருந்தால்போதும். இதோ என் கையைப்பார்! இதில் என்னவிகாரம் தோன்றுகிறது எனத் தன் கையைத் திறந்து காட்டினுள்.

கம. எல்லாம் சரிதான், அம்மை குத்திக்கொள்வதும் பிறகு அது கொப்புளிப்பதும வெகு வருத்தமாயிற்றே. அந்தக் கஷ்டத்தை அநுபவிப்பதினும் சும்மா இருப்பது நலமல்லவா?

தங். இந்தச் சொற்பவருத்தத்திற்குப் பார்த்தால் என்னசெய்கிறது? உள்ளங்கால்முதல் உச்சந்தலைவரையில் ஊசிநாட்ட விடமின்றி அம்மை வார்த்துவிட்டால் அந்த வருத்தத்தை யோசித்துப் பார்; முதலில் கொஞ்சம் கஷ்டப்பட்டால்தான் பிறகு சுகப்படலாம்.

கம. சிலர் அப்படி கஷ்டபபட்டுக் குத்திக்கொண்டும் பலிக்காமற்போகிறதென்றுயே, நன்ருய்க் குத்தப்பட்டதென்பதற்கு அடையாளமென்ன?

தங். அதுவும் தேகக்கூறுக்கு ஏற்றபடி பலவிதமாயிருக்கும். ஆயினும் சாதாரணமாய் வைசூரிகுத்திய மூன்றுநாள் குத்திய விடத்தில் நோவெடுத்துக் கொப்புளிக்க ஆரம்பிக்கும். பிறகு நீர்க் கொண்டு, எட்டாநாள்வரையில் அப்படியிருக்கும். பின்பு முறையே இறங்கி நோவும் நீங்கிப்போம். சிலநாளிலே கொப்புளம பொருக்காய் உலர்ந்து உதிர்ந்துபோம். அப்புறம் அங்கே வடுத்தவிர மற்ரென்றுமிராது.

கம. ஆனல் இப்போது நானும் குத்திக்கொண்டு குழந்தைகளுக்கும் அமமைகுத்துவது அவசியம, என்கிருயேயா?

தங். உபதேசத்தைவிட உதாரணம் பெரிதென்று உனக்குத் தோன்றும்பக்ஷத்தில் அப்படியேதான் செய்யவேண்டும். நமக்காக எவ்வளவோ பாடுபட்டு இந்த உண்மையை ஜென்னர் கண்டுபிடித்தாரே. அதன் பயன் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்ருய்த் தெரிந்திருந்தும் அவிவேகத்தால் அதை உபேக்ஷைசெய்து அப்பயனை இழந்து பெருந்துன்பம் அநுபவிபபவர்களைப் பார்ததால் எனக்கு ஆருததுயரம் உண்டாகின்றது. ஜென்னருடைய திறமையைக் கண்டு கொண்டாடுகிறவர்களாயின், அவர்க்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு அவருடைய குறியான வைசூரி வடுவைப் புஜங்களில் வகிப்பதைவிட வேறில்லை. நான் வந்து வெகுநேரமாயிற்று; வீட்டுக்குப்போய்வருகிறேன். என்னவோ சொல்லிவிட்டுப்போனுளென்று உபேக்ஷையாயிராதே எனவுரைத்து உத்தரவுபெற்றுக் கொண்டு வீட்டுக்குச்சென்ருள்.

ஒரு பண்டிதருடைய பாலபருவம்.

அங்கிலேய பாஷையை அறிந்தாருள் சார்லெஸ் டிகென்ஸ் எனும் பண்டிதனைப்பற்றிக் கேளாதார் இல்லை. அவர் ஆதியில் கிரந்தமெழுத ஆரம்பிக்கையில், தாமாகவே 'பாஸ்' என்று நாமம் சூட்டிக்கொண்டார். அதன்பின்பு மற்றோர் கிரந்தத்தை எழுதித் தமது தம்பியின் செல்லப்பெயராகிய 'பிக்விக்' என்பதை அதற்கிட்டார். அந்தக் கிரந்தத்தினால் அவர் விரைவில் எங்கும் பிரசித்திபெற்றார். அந்தக் கிரந்தத்தைப் படிக்கப்படிக்கச் சிரிப்பும் விளையாட்டுமாய் இருக்கும். நாம் இப்பொழுது அவர் இயற்றிய நூல்களைப்பற்றிச் சொல்லப்புகாமல் அவரது பாலபருவத்தைப்பற்றிமட்டும் சிறிது சொல்லுகிறோம்.

அவர் சிறுகுழந்தையாயிருந்தகாலத்தில், அழகியதும், புராதனமானதும், மிட்வேயாற்றின் அருகே உள்ளதுமான சாதம்நகரத்தில் வசித்தார். சிறுவர்களுக்கு அந்நகரத்தைப்போல வசிப்பதற்கேற்ற இடம் வேறெங்குமிராது. ஆயினும் டிகென்ஸ் என்பவர் ஆற்றலில்லாச் சிறுவனாயிருந்ததனால், மற்றப் பிள்ளைகள் விளையாடுவதைப் பார்த்துக் களிப்பதைத் தவிர்த்து அவர்தாமே அவ்வாறு ஒன்றுஞ்செய்ய வாய்க்கவில்லை. அவருடைய நல்லவேளையாய் இளம்பிராயந்தொட்டே, பாடசாலைக்குப் போகுமுன்பே, தமது அன்னையார் மடியிலிருந்தவண்ணமே அவர் புத்தகங்களைக் கண்டால் அதிக ஆவலாயிருப்பார். அந்நாளில் இப்பொழுது இருப்பதுபோலப் புத்தகங்கள் அத்தனை அதிகமாய்க் கிடைக்கா. இருந்த சில பழைய புத்தகங்களைப் படித்துவிட்டு, வேறு புத்தகமின்மையால் அவற்றுள் சிறந்த அராபிக்கதைகள் முதலியனவற்றை மீண்டும் படித்துவருவார். ஒவ்வோர் சமயங்களில் அவர் அவற்றிலுள்ள விஷயங்களை மற்றச் சிறுவர்கள் கேட்டு வியக்கும்படிக் கதையாக மொழிவதுமுண்டு. இவ்வாறு களிப்புற்று வாழ்ந்து வருகையில் அவர்க்குப் பெரிய இடையூறு ஒன்று உண்டாயிற்று: அவருடைய தந்தை தமது குடும்பத்தாரோடு சாதம்நகரத்தைவிட்டு லந்தன்மாநகரஞ்சென்றார்.

அவர் அங்கே போனதுமுதல் வறுமையால் வருத்தமுற்று அன்றடம் வயிறுவளர்ப்பதே வருத்தமாயிற்று. இருந்த பழைய புத்தகங்களிற் சிலவற்றையும் ஒவ்வொன்றாய் விற்கும்படி நேரிட்டது. இவ்வாறு அவரது பெற்றோர் வறுமையால் மனமழிந்துநிற்கையில், அந்நகரத்தில் சாதம்நகரத்திலிருந்ததுபோலச் சுத்தமான காற்றில்லாமல் டிகென்ஸ் நோய்கொண்டு சிந்தைசோர்ந்தார். அவருடைய தந்தையானவர் பட்டகடனை இறுக்கமாட்டாமல் சிறைச்சாலையில்

அடைக்கப்பட்டார். அதன் பின்பு அக்குடும்பத்தார் அங்கிருக்கச் சகிப்படாமல படாத கஷ்டங்களையெல்லாம் படவேண்டியதாயிற்று. வேறுகதியின்மையால், டிகென்ஸென்பவர் தாமாகவே பொருள தேடி வயிறுவளர்க்கவேண்டியதாயிற்று. ஆகவே அவர் லந்தன்நகரத்திலுள்ள ஓர் தொழிற்சாலையிலமர்ந்து, பகல்நேரமெல்லாம் குப்பிகளுக்குக் கறுப்புமை பூசிக்கொண்டு வாரமொன்றுக்கு மூன்றுரூபாய் சம்பளம வாங்கி ஜீவனம்பண்ணும்படி நேர்ந்தது. அவர் உலகவியாபாரத்தில் நன்றாய்ப் பயிலாத சிறுபிள்ளையாயிருந்ததுபற்றி, தனியே லந்தன்நகரத்தில் இந்த மூன்றுரூபாயிலே வாரத்தின் முதலில் அதிகமாய்ச் செலவழித்துவிட்டுப் பின்பு செலவுக்கில்லாமல அந்த வாரமெல்லாம் கஷ்டப்படுவார். இவருக்கு அதிபால்யத்தில் இப்படி அன்னவிசாரமே பெரியவிசாரமாகிவிட்டதனால், இவ்வித்துவான் அடிநாளில்பட்ட துன்பம் மிகப் பெரிது. இவரோடுகூட இருந்த பால், கிரீன், பேஜின், முதலிய தோழன்மார் நிரக்ஷரகுக்ஷிகள் ஆதலால், இவரது பெருமையையறியாமல் இவரைக் கண்டால் ஒன்றும், காணவிட்டால் ஒன்றுமாக ஒவ்வோர் சமயங்களில் இகழ்ந்துபேசுவதும் உண்டு. வீம்பாவது தற்புகழ்ச்சியாவது இவரிடத்தில் என்றுமிருந்ததேயில்லை. இவர் தமக்கிட்டவேலையில் ஒருநாளும் வஞ்சனைபண்ணுகிறதில்லை. இவருக்குத் தக்க பருவம் வந்தபின்பு ஒரு சமயத்தில் தம்மைப்பற்றித் தாமே சொல்லுகையில் "நான் பட்ட கஷ்டத்தை இவ்வளவு என்று அளவிட்டுச்சொல்ல எனக்குத் திறமில்லை; ஆனால், நான் கொண்ட கோட்பாடு என்னவென்றால், மனதுக்கு மனதே சாக்ஷி என்றவண்ணம் ஏற்றுக்கொண்ட வேலையைக் கைசோரவிடாது செய்யவேண்டுமென்பதேயாம்" என்றார். இவர் சிறுவயதில் தம்மைக் காப்பாற்றுவாரற்று, கறையான் தன் வாய் நீரைக்கொண்டு பிழைப்பதுபோலத் தாமாகவே தலையெடுத்து முன்னுக்குவந்தார். ஆண்டவனது அருளொன்றுமட்டும் இவருக்கு இல்லாவிடின் இவ்வாறு இவர் நலம்பெற்றுப் பேர்பெற்ற பண்டிதராயிரார் என்பது இவர் தம்மைப்பற்றித் தாமேகொண்ட கருத்து. அடிநாள் முதற்கொண்டு இவர் அளவற்ற கஷ்டங்களையெல்லாம் தாமே பட்டறிந்தவர் ஆதலால், இவரெழுதிய நூல்களைப் படிப்பவர்களுக்கு இவ்வுலகவிருத்தாந்தமனைத்தும் நன்றாய்ப் புலப்படும். அங்கிலேய பாஷை வழங்கும் இடங்களெல்லாம் இவரை இப்பொழுது கொண்டாடாதார் இல்லை. 'பெருமையும் சிறுமையும் தான்றரவருமே' என்றவண்ணம் இவர் தமக்குத்தாமே வருந்திப் பாடுபட்டு எங்கும் தமக்குப் பெருமைதேடிக்கொண்டார்.

இப்படியிருக்க 1774-ம் வருஷத்தில் அங்கிலேயர் அந்தத் தீவை மகாராஷ்டிரரிடம் இருந்து கைப்பற்றிக்கொண்டார்கள்; ஆயினும் அநேகவருஷகாலம்வரையில் அவர்களும் சீரப்படுத்தி விருத்திக்குக் கொண்டுவரக்கூடாதபடி அது அத்தன்மையாய்க் கேடு கெட்டுக் கிடந்தது. 1796-ம் வருஷத்திலேகூட பம்பாயில் நிலங்கள் மிகவும் அதிகமாய்த் தீர்வை விதிக்கப்பட்டிருந்தாலும், ஸால்ஸெத்திலுள்ள நிலங்களினும் பயிர்செய்பவர்களுக்குப் பதின்மடங்கு அதிகமாகப் பயன்கொடுப்பவைகளாயிருந்தன. பண்டோரா என்னும் இடம் ஒன்றுமாத்திரமே தன் சீர்மைகுறையாமல் ஒரேமாதிரியாகச் செழித்திருந்தது. அதற்குக் காரணம் அவ்விடத்துக் குடிகள் தங்கள் நிலங்களுக்குத் தீர்வை குறைவாயிருக்கும்படி செய்துகொண்டதும், கடல்மார்க்கமாய் மேலண்டைக்கரைக்கும் வடநாடுகளுக்கும் வர்த்தகஞ்செய்ய அவர்களுக்கு வாய்த்திருந்ததுமேயாம்.

ஸால்ஸெத்துத்தீவு இவ்வண்ணம் சீர்மைகுலைந்திருக்குங்காலத்திலே பம்பாய் துரைத்தனத்தார், இவ்விசுதியாவில் குடியேறுவது அபாயகரமானதென்று வழக்கப்படி அங்கிலேயரை அதைரியப்படுத்துவதைவிட்டு, அதற்காகப் பலரை உற்சாகப்படுத்தித் தூண்டலானார்கள். அதுகேட்டுச் சிலர் 1793-ம் வருஷத்தில் சில நிபந்தனைகளின்மேல் அந்தப் பூமிகளுக்கு யஜமானர்களாயிருக்க உடன்பட்டு அவ்வண்ணமே ஏற்றுக்கொண்டார்கள். பிறகு அந்நிலங்களைப் பயிர்செய்வதற்குச் சுதேசக்குடிகள் அவசியமாதலால் அவர்களை உற்சாகப்படுத்தி வரவழைக்கும்பொருட்டு, "இப்பொழுது எந்தெந்த நிலம் யாருடைய சுவாதீனத்திலிருக்கின்றதோ அந்தந்த நிலத்தை அவரவரே தானுதி வினிமய விக்கிரயயோக்கியமாய் புத்திர பவுத்திர பாரம்பரியமாகச் சொற்பத்தீர்வை கட்டிக்கொண்டு அனுபவித்துவரும்படி சாச்வதப்பட்டாகொடுக்கத் துரைத்தனத்தார் சித்தமாயிருக்கின்றனர் என்றதாய் ஒரு பிரசித்த பத்திரிகை விளம்பரஞ்செய்யப்பட்டது. அதுமுதல் அந்தத் தீவு அங்கிலேய அரசாட்சியில் வெகு செழிப்பாக விருத்தியடைந்து வருகின்றது.

விச்வந்தரராஜன்கதை.

(தொடர்ச்சி.)

பெருங்கொடைவள்ளலெனப் பிரசித்திபெற்ற விச்வந்தர மகாராஜன் தன்னுடைய மக்களிருவரையும் அரணியத்திலே யாசகனொருவன் வந்து கேட்க, அவனுக்குத் தானம்பண்ணிவிட்டானெ

னவும், அச்சமயத்தில் பூமி கிடுகிடென நான்குதரம் நடுங்கியதென வும் முன்சஞ்சிகையிற் சொன்னோமே; அப்போது அம்மக்களுடைய தாய் காட்டிலே கனிகிழங்கு குச்சுமுதலியவை சேகரித்துக் கொண்டிருந்தாள். பூமி நடுங்கியதுகண்டு அவள் ஆச்சிரமத்தில் குழந்தைகள் என்னவாயினவோவென்று விசாரமுற்றுச் சேகரித்துக்கொண்டிருந்த சாமான்களை அப்படியே எடுத்துக்கொண்டு பர்ணசாலைக்குப்போகத் திரும்பினாள். திரும்பிச் சிறிதுதூரம் செல்வதற்குள்ளே வாயஸம் கட்டியது, வலியன் வலமாகியது, கடுவன் குறுக்கிட்டது; இவைமுதலான தீக்குறிகளைக் காணவே அவள் முன்னிலும் அதிகமாக மனங்கலங்கியவளாய்ப் பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமெனப் பேராவல்கொண்டு வெகு விரைவாகச் சென்றாள். ஆச்சிரமத்தின் அருகே போம்போது அங்கே சந்தடியொன்றுமில்லை, ஆசிரமத்துள் புகுந்து பார்த்தாள்; அங்கேயும் பிள்ளைகளில்லை, புருஷனுமில்லை. ஒருவருமில்லாமற்போகவே இதென்ன விபரீதமென்று அப்பிள்ளைகள் புழுதியளைந்து விளையாடுகின்ற பக்கங்களெல்லாம் தேடிப்பார்த்தும் காணாமல், முன்னாளில சீதையைப் பறிகொடுத்த ஸ்ரீராமனும், நளனைப்பிரிந்த தமயந்தியும் அல்லாடியவிதமே அக்காட்டிலுள்ள செடிகொடி பக்ஷிமிருகம் முதலிய எல்லாவற்றையும் கண்டு, ஓ பூஞ்செடியே, உனக்கு எந்நாளும் இருபொழுதும் தவறாமல் தண்ணீர் ஊற்றிப் பத்திரமாய்ப் பாதுகாத்துவந்த பிள்ளைகள் எங்கேபோனார்கள்? ஓ கிளிகாள், உங்களுக்குப் பேச்சுக்கற்றுக்கொடுத்துப் பொழுதுதவறாமல் போஜனமளித்துப் போற்றி வளர்த்துவந்த பிள்ளைகளைப் பார்த்தீர்களா? ஓ மான்களே, உங்கள் குட்டிகளைக் கருத்துடன் காப்பாற்றிவரும் என் குழந்தைகளைக் கண்டீர்களோ என்றிப்படிப் பலவாறாகப் பாதையிலுள்ள புல்பூண்டு முதலியவைகளுடன்கூடப் புத்திப்பிரமை பிடித்தவள்போலப் பேசிக்கொண்டு இப்புறமும் அப்புறமும் தேடியோடினாள். இதற்குள் கணவன் எதிரில் வரக்கண்டு அதிவேகமாய் அவனிடம் சென்று நம்குழந்தைகள் எங்கேயென்று கேட்க, அவன் சிறிதும் சந்தேகப்படாமல், ஒரு பெரியவர் வந்து கேட்டார், கொடுத்துவிட்டேன் என்று சொன்னான்.

அதைக் கேட்டவுடனே அவள் மூர்ச்சைபோய்க் கீழேவீழ்ந்தாள். பெற்றவளுக்குத்தானே தெரியும் பிள்ளையருமை. மூர்ச்சை தெளிந்தபின்பு ராஜன் அவளுக்குப் பலவிதமாய்ப் பிரியவசனம் சொல்லிச் சமாதானப்படுத்தினான்; ஆயினும் பிள்ளைகளைப்பற்றிய நினைவு அவள் நெஞ்சை நித்தமும் வருத்திக்கொண்டேயிருந்தது. அவ்வண்ணமே அவர்கள் இருவரும் சிலகாலம் அக்காட்டில் முன்போல வாசஞ்செய்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்குங்காலத்திலே இந்த விச்வந்தராஜனுடைய புகழ் தேவலோகம்வரையில் பரவிப்போயிற்று. இவனுடைய உதாரகு

ணத்தைக் கேள்விப்பட்டு தேவேந்திரன் தான் நேராகவே போய் அதைப் பரீக்ஷைசெய்து பார்க்கவேண்டுமென விருப்பங்கொண்டு, ஒரு உத்தம பிராமணனாக வேஷந்தரித்து விசுவந்தரராஜனிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்தவுடனே விசுவந்தரன் வெகு சந்தோஷமடைந்தவனாய் எதிர்கொண்டுபோய் அழைத்துவந்து, அர்க்கியம் பாத்தியம ஆசனம் முதலிய பதினாறு உபசாரங்களும் செய்து, பிறகு அவருடைய யோகக்ஷேமங்களை வினவ ஆரம்பித்தான். அப்படியே ஒன்றின்மேலொன்றாய்ப் பேசிக்கொண்டு வரும்போது விருந்தாளி வேந்தனைநோக்கி, ராஜனே, நான் முக்கியமாய் ஒரு காரியத்தை உத்தேசித்து உன்னிடம் வந்தேன்: இரப்போர்க்குக் கற்பகத்தருவென்று யாவரும் உன்னைக் கொண்டாடுவதைக் கேள்விப்பட்டிருக்கிறேனாகையால் உன்னிடத்தில் நினைத்தகாரியம் கைகூடுமென்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாய் உண்டு; என் மனோரதத்தைப் பூர்த்திபணணுவதாய்ப் பிரமாணம் செய்வாயானால் வந்தகாரியத்தைச் சொல்லுகிறேன், இல்லாவிட்டால் வந்தவழியே வீடுபோய்ச் சேருகிறேன் என்றான். அது கேட்டு அரசன், தேவரீர அடியேனை ஒரு பொருட்டாக மதித்து இக்குடிசைக்கு எழுந்தருளினதனாலேயே அடியேன் கிருதார்த்தனாயினேன். அடியேன்விஷயத்தில் ஒன்றும் வித்தியாஸமாக நினைக்கக்கூடாது. இவ்விடத்திலுள்ளது எதுவேண்டுமானாலும் அடியேன் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன, திருவுள்ளத்தைத் தெரிவிக்கவேண்டும்; ஸங்கோசப்படவேண்டாம் என்று தைரியமாய்ச சொல்ல, தேவேந்திரன் மிகவும் சந்தோஷமடைந்து, தன் காரியம் அப்போதே கைகூடினதாக நினைதது, நான் உன்னைக் கேட்கவந்தகாரியம் வேறொன்றுமல்ல, நமது வீட்டில் வேலைக்காரி ஒருத்தியுமில்லை; எங்கேயும் சுலபமாய்க் கிடைக்கவில்லை. நீ இரப்போர்க்கு இல்லையென்று சொல்லாத உத்தமபுருஷனாகையால் உன் பெண்சாதியை வேலைக்காரியாய்க் கொடுக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொண்டு போகலாமென்று வந்தேன். சொன்னவாக்குத் தவறாமல் பெண்சாதியைப் பிரீதியாய்த் தானம்பண்ணிவிடவேண்டுமென்றான். அதைக்கேட்டவுடனே அரசன் திடுக்கிட்டு ஒன்றும் பதிலுரைக்கத தோன்றாமல் இரண்டொருநிமிஷம் பிரமித்துநின்று பிறகு சில நியாயங்களையெடுத்துப்பேச, அவைகட்கெல்லாம் அந்த யாசகன் ஏற்ற சமாதானம சொல்லியது கேட்டு அதன்மேல் ஒன்றும் எடுத்துரைக்கக் கூடாதென்று தக்ஷணமே பெண்சாதியை அழைத்து, பணிவிடைக்காரியாய் இவருடனே போய்விடவேண்டுமெனத் திட்டஞ்செய்தான். கணவன் கட்டளைக்குக் குறுக்குச்சொல்லாமல் அப்பெண்மணியும் அவ்வண்ணமே புறப்பட்டுப்போகச் சித்தமாக வந்துசேர்ந்தாள்.

இதைக்காணவே இந்திரனுக்கு அவர்களிடத்தில் அதிக சந்தோ

ஷமுண்டாயிற்று. பெண்சாதி புருஷன் இரண்டுபேரும் இப்படி ஒரேமனதாகக் கொடுப்பதில் குதூகலமுள்ளவர்களாயிருக்கின்றனரே! எதற்கும் ஒரு அளவுண்டு, இவர்கள் கொடைக்கு அளவில்லை; பெண்சாதி பிள்ளைகளைக்கூடக் கொடுத்துவிட்டவன் இனி எதைத்தான் இரப்போர்க்குக் கொடுக்கப் பின்வாங்குவான். இவனைப்போல உத்தமபுருஷன் உலகில் மற்றெவருமில்லையென மகிழ்ச்சிகொண்டு அவனை நோக்கி, ஓ ராஜரிஷியே, நான் உமது உதார குணத்தைப் பரீக்ஷித்துப்பார்க்கவேண்டுமென்று மாறுவேஷம் பூண்டு வந்த தேவேந்திரனேயன்றி உண்மையான யாசகனன்று; உமது மனவுறுதியைக் காண நான் மிகவும் மனம்உவக்கின்றேன். இம்மனையாளுடன்கூட நீர் அரசாட்சிசெய்துகொண்டு வெகு நாள் சுகமாக வாழ்ந்திருக்கக்கடவீர். உமது புதல்வரையும் உடனே உம்மிடம் வந்து சேரும்படிச் செய்வேன் என்று சொல்லி மறைந்துபோய்விட்டான்.

அதன்பிறகு தேவேந்திரன் விச்வந்தரராஜனுடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோன மனிதனிடம் சென்று அவனுக்குப் பலவிதமாய்ப் போதனைகள்செய்து அக்குழந்தைகளை அவர்களின் தாயைப்பெற்ற பாட்டனுடைய பட்டணத்தில் அவ்வரசனுக்கு விலைக்கு விற்றுப்போடும்படி செய்தான். அதன்படியே அந்த எளியமனிதன் அப்பிள்ளைகளை விற்கும்படி அழைத்துக் கொண்டுபோய் அப்பட்டணத்துக் கடைத்தெருவில் வைத்துக் கொண்டு விலைகூறலானான். அந்தச் சமயத்தில் இந்திரன் யாரோ ஒரு வழிப்போக்கன்போல் அவ்வரசன் அரண்மனைக்குப்போய், மகாப்பிரபுவே, தங்கள் நகரத்துக் கடைத்தெருவில் யாரோ ஒருவன் இரண்டு குழந்தைகளை விற்கக் கொண்டுவந்திருக்கிறான். அவர்கள் வடிவழகில் ராஜவம்சத்திலே பிறந்தவர்போலிருக்கிறார்கள்; உற்றுப்பார்க்கையில் உமது பேரப்பிள்ளைகள்போல ஜாடை காட்டுகின்றது; அதனால் அச்செய்தியைத் தங்களிடம் தெரிவித்துப்போகலாமென்று வந்தேன்; சித்தப்படி நடக்கவேண்டுமென்று கூறினான்.

அதுகேட்டு அந்த ராஜன் தன் சேவகர்களை அழைத்து உடனே கடைதெருவுக்குப் போய் அக்குழந்தைகளோடுகூட விற்கவந்த மனிதனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். அப்படியே அரைநிமிஷத்தில் ஓடிச் சேவகர்கள் அச்சிறுவர்களை அழைத்துக்கொண்டு அம்மனிதனையும் பிடித்துவந்தார்கள். அவனைநோக்கி அரசன், இம்மக்கள் யார், இவர்கள் உனக்கு வாய்த்தவிதமென்ன? உண்மையைச் சொல்லவேண்டும், இல்லாவிட்டால் தக்கதண்டனை நேரிடும் என்று சற்று அதட்டிக் கேட்க, அவன், மடியில் கனமிருந்தாலல்லவோ வழியில் பயம்! நான் பொய்பேசவேண்டிய நிமித்தமென்ன? நான் எங்கும் இவர்களைத் திருடிக்கொண்டு வரவில்லை; விச்வந்தரனென்ற மகாராஜன் தபோ

வேஷம்பூண்டு தவசிகளுடன் காட்டில் வசித்துக்கொண்டிருக்கிறாரே! அவர் எனக்கு தானங்கொடுத்த பிள்ளைகள். இவர்களை இப்பட்டணத்தில் விற்றால் விலை அதிகமாய்க் கிடைக்குமென்றார்கள். அதனால் இவ்விடததுக்குக் கொண்டுவந்தேன்; மற்றப்படி விசேஷமிலலையென்றான்.

அவனுடைய வாய்மொழியினாலேயே செய்தி வெளிப்படையாய்த் தெரிந்துவிட்டது. அவர்கள் தன் பேரப்பிள்ளைகளேயென்று முகக்குறியினாலும் அவ்வரசன் கண்டறிந்துகொண்டு, அப்படியேயாகட்டும, நீர் இப்பிள்ளைகளுக்குக் கோருகிற விலை எவ்வளவு என்று கேட்டான். அந்த யாசகன் எனக்குப் பதினாயிரம ரூபாய் கொடுத்தால் பிள்ளைகளைக் கொடுத்துவிடுகிறேனென்று கூற, அரசன் பின்னும் ஆயிரம் ரூபாய் அதிகமாகவே அவனுக்குக் கொடுத்துவிட்டுத் தன் பேரப்பிள்ளைகளையெடுத்து மடியில் உட்காரவைத்துக்கொண்டு சிறிதுநேரம் சிந்தைகலங்கிநின்றான். உடனே மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு பேரப்பிள்ளைகளுக்குப் பல விதமான உபசாரங்களும் செய்து போஜனம் அளிக்கத் திட்டம் செய்து, காட்டில் தன் மருமகன் இருக்கும் இடம் போய்த் தேடிப் பிடித்துக் குழந்தைகள் வந்திருக்கிற செய்தியைத் தெரிவிதது தன் பட்டணத்திற்கு அவனை அழைத்துக்கொண்டு வரும்படியாகவும் தூதர்களை அனுப்பினான்.

இது இப்படிநிற்க, விச்வநகரத்திலே விச்வாமித்திரராஜன் இறந்து போனான். அப்பட்டணத்துப் பிரபுக்களும் அதிகாரிகளும் அரசனில்லாமல் ஒருநிமிஷமும் நாம் இப்பட்டணத்திலிருக்கலாகாது; உடனே நாம் அரணியத்திற்குச் சென்று இளவரசை அழைத்துவந்து முடிசூட்டவேண்டுமென்று ஆலோசித்து, அவ்வண்ணமே ரதகஜதுரகபதாதியென்னும் நால்வகைப் படைகளோடுகூடப் புறப்பட்டு அப்பெருங்காட்டிற்குள் சென்றார்கள். அவ்வளவுபெரிய சேனை கோவென்றிரைந்துகொண்டு காட்டிற்குள் வருவதுகண்டு விச்வந்தரனும் அவன் மனையாட்டியும், இதென்ன, ஒருநாளுமில்லாமல் இப்பெருஞ்சேனை காட்டிற்குள் வருகின்றதே! நம்மை இன்னும் அதிகதூரத்தில் துரததிவிடவேண்டுமென நமது பட்டணத்தினின்றும வருகின்ற படையா? அல்லது தேவேந்திரன் வாழ்த்திப் போனபடி நமக்கு ராஜ்யபாரம் அளிக்கும்படி வருகின்ற படையா என்றிப்படி ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பட்டணத்திலிருந்து வந்த பிரபுக்கள் சேனைகளைக் காடடுக்குள் கொண்டுபோனால் அங்குள்ள முனிவாகளின் தவத்துக்குத் தடையுண்டாகுமென்று தெரிந்து சைனியங்களையெல்லாம் சிறிதுதூரத்துக்கு அப்பாலே நிறுததிவிட்டுத தாம்மாத்திரம் தனியே ஆச்சிரமத்தண்டைக்குச் சென்றார்கள். அவ்விடத்தில் விச்வந்தராஜனைக்கண்டு, பெரியராஜா பரலோகம் அடைந்து ராஜ்யம் அராஜக

மாய் அல்லாடுகின்ற செய்தியை அறிவித்து எவ்விதத்திலாயினும் மனமிரங்கி ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொண்டு குடிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று யாவருமொன்றுகூடிப் பிரார்த்திததார்கள். அவர்களுடைய வேண்டுகோளை மறுக்கத்துணியாமல் அவ்வரசனை அதற்குச் சம்மதிக்க, உடனே அரசனை ரதந்தின்மேலேற்றிக்கொண்டு ராஜவாத்தியங்கள் முழங்க ராஜபரிவாரங்கள் புடைசூழ்ந்து வர வெகு வைபவமாய்ப் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டு போய்ப் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். இதற்குள் விச்வந்தர ராஜன் தானம்பண்ணிவிட்ட அவனுடைய பெண்ணும் பிள்ளையும் பாட்டனுடைய பட்டணம் சேர்ந்து அங்கே சுகமாயிருக்கிறார்கள் என்ற க்ஷேமஸமாசாரமும் அவ்விடம் வந்து சேர்ந்தது. அதைக் கேட்டு அரசன் அதிக சந்தோஷமடைந்து அம்மக்களைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு வெகுகாலம் ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்திருந்தான்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

முன்னொரு சமயத்திலே வசந்தகாலத்தில் நான் வடதேசயாத்திரையாகப் போகும்போது ஒருநாள் ஒரு சிறுகிராமத்திற்குச் சென்றேன். அங்கே வெகு அழகான பூஞ்செடிகளும், பழச்செடிகளும், பலவகை விசித்திரமான பூங்கொடிகள் ஏறவிட்டுக் கட்டிய கொடிமண்டபங்களும், அன்னம்முதலிய நீர்ப்பறவைகள் நீந்தி விளையாடும் விதம் விதமான தாமரைத்தடாகங்களும் அமைந்து குமுகுமுவென்று வாசனை வீசப்பெற்ற ஒரு சிங்காரத்தோட்டத்து மத்தியிலே சிறியவீடு ஒன்று இருந்தது. அவ்வீட்டுவாயிலண்டை போகையில் தெருத்திண்ணைமேல் ஏழெட்டுப் பிராயமுள்ள ஒரு பையன் படுத்துக்கொண்டிருந்தான். அவ்வீடு அத்தனை விநோதமாயிருந்ததாயினும் அதில் அப்போது உண்டான கூச்சல் அதற்கு முற்றும் விரோதமாய்த் தோன்றியது. தெருததிண்ணைமேல் விழுந்து கிடந்த பையன் பெருங்குரல் பாய்ச்சிப் புலம்பிக்கொண்டிருந்தான். அப்புலம்பலைக் கேட்குமபோது அவ்வீட்டில் யாருககாயினும், அவர்கள் பந்துமித்திரர்களுள் எவாக்காயினுமம ஏதாவது வருத்தமான வியாதியோ, அல்லது வேறு எந்தவிதமான ஆபத்தோவென நினைக்கும்படியாயிருந்தது. அப்பையன் திண்ணையின்மேல் விழுந்து விழுந்து புரள்வதையும், அடிக்கடி எழுந்து காலைக்கொட்டுவதையும, வாயில் இன்னதென்று அகப்படாமல் சலசலவென்று சில வீண்பேச்சுகள் பேசுவதையும் நன்றாய் உற்றுப்பார்த்தபின்பு மூர்க்ககுணமா

கிய நோய் அவனைப் பிடித்துக்கொண்டிருக்கின்றதெனவும், அவ்வழுகைக் கூச்சல் அதனாலேதானெனவும் தெளிவாய்த் தெரிந்தது.

அந்தப் பையன் நாள்தோறும் காலையில் தந்தையினிடததில் பாடம்படிப்பது வழக்கம். அவ்வழக்கப்படியே அன்றையதினமும் முதனாள் பாடம் ஒப்புவிக்கப்போனான். பாடம் நன்றாய்த் தெரியவில்லை; அதுகண்டு தகப்பன கோபித்துக்கொண்டு, நீ தெருத்திண்ணையின்மேலேறித் தனியாய் நின்று பாடததை நன்றாய்ப் படித்துக்கொண்டுவந்து ஒப்புவியெனத் திட்டஞ்செய்தான். திண்ணைமேலேறவேண்டாம், இங்கேயே நின்று நன்றாய்ப் படிக்கிறேன் என்று பையன் சொல்ல, நீ இங்கே படிக்கக்கூடாது, தம்பிக்குப் பாடம் படிப்பிக்கப் போகிறேன்; நீ சலசலவென்று கூச்சலிட்டால் கலவரித்துப்போகும். நான் சொல்லுகிறபடி கேட்டுத் திண்ணைமேலேறித் தூரப்போய் நின்று படி என்றான்.

அந்தப பையன் மறுபடியும், நான் கூச்சல் போடவில்லை; என் மனதிற்குள்ளேயே மெதுவாய் படித்துககொள்ளுகிறேன் என்று வேண்ட, தகப்பன் அதிக கோபம் அடைந்து, என் சங்கதி உனக்குத் தெரியாதோ! கிரமமாய்த் தெருவுக்குப் போனால் தப்பினாய், இல்லாவிட்டால் நீ படுகிறபாடு நாய்கூடப் படாது பார். இந்தத் தடவை நான் சொல்லுகிறபடி கேட்டு அப்புறம் போய்ப படிப்பாயானால் மற்றொரு தருணத்திலாயினும் உன்னிஷ்டப்படி நடக்க நான் சம்மதிப்பேன் என்று சொன்னான். அதற்கும் அச்சிறுவன் அவ்விடம்விட்டு அப்புறம் போகவில்லை. இந்தத் தடவைமாத்திரம இங்கேயே உட்கார்ந்து படிக்கும்படி உத்தரவு கொடுங்கள்; இனிமேல் தாங்கள் எங்கே போகசசொன்னாலும் தப்பாமல் அவசியம் போகின்றேன் என்று நின்றவிடததிலேயே அசையாமல் நின்றான். அதுகண்டு தகப்பன் அதிக ஆக்கிரகம் கொண்டவனாகிக் கையிலே பிரமபெடுததுக்கொண்டு, இவ்விடத்தைவிட்டு அப்புறம் போகிறாயா என்னவென்று அதட்டினான். அதட்டவே அடிக்கப்போகிறானென்ற பயத்தினால அவன் மெல்ல நகர்ந்து தெருவிலே போய்நின்று படிப்பதற்குப்பதிலாகப் புஸ்தகத்தை இப்படியும் அப்படியும் திருப்பி, இதற்கு நான் என்னசெய்கிறதென்று ஆலோசித்துக்கொண்டு சிறிதுநேரம் அபபடியே இருந்தான். தகப்பன் மற்றப்பிள்ளைகளுக்கெல்லாம் பாடம் சொல்லிககொடுத்த பிற்பாடு தெருவில் இந்தப் பையனிடம் வந்து பாடம்வருமானால் ஒப்புவியெனறு கேட்டான். அவனுக்கு ஒரு வரிகூடத் தெரியவில்லை. படித்தாலல்லவோ தெரியப்போகிறது. அது கண்டு தகப்பன் இன்றையதினம் நீ எவ்வளவு பிடிவாதம்பண்ணினாலும் சரி, பாடம் ஒப்புவிக்காமல் இவ்விடம்விட்டு நகரக்கூடாதென்று கண்டிப்பாய்ச சொல்லி அப்புறம் வந்துவிட்டான்.

அதுகேட்டு அச்சிறுவன் ஒன்றுந்தோன்றாமல் எப்படியாயி

னும் தான் பிடித்த பிடியைச் சாதிக்கவேண்டுமெனக் கோவென்று பெருங்குரலெடுத்துப் புலம்பத்தொடங்கினான். பையன் புலம்புவது தெரிந்தும் தகப்பன் அவனண்டைபோய், ஏன் அழுகிறாய், வேண்டாமென்று சமாதானம்பண்ணவில்லை; நெடுநேரம் சுமமாயிருந்தான். எந்நேரம் சும்மாயிருந்தாலும் அவன் அழுகை ஓயவில்லை; புஸ்தகத்தையும் அவன் கையிலெடுக்கவில்லை. அதுகண்டு தகப்பன் இனி நாம சும்மாயிருந்து பயனில்லை; நாம் நிர்ப்பந்திக்க நிர்ப்பந்திக்க இவனுடைய பிடிவாதம் அதிகமாகின்றது; இவனை நல்வழியில் அடக்கவேண்டுமேயொழிய மற்றப்படி முடியாதெனத தெரிந்து அவனண்டை போய், குழந்தாய், நீ இப்படிச் செய்வது உனக்கு நல்லதுதானா? இப்படி மூர்க்கமாய் அழுவாயானால் பார்ப்பவர்களெல்லாம் உன்னைச் சிரிக்கமாட்டார்களா? வீணாகவெல்லாம் அழாதே, புஸ்தகமெடுத்துப் படியென்று சொல்ல, அதற்கும் அப்பையன் ஒன்றும் வாயைத திறவாமல அழுதவண்ணமாயே இருந்தான்.

சற்றுநேரம் பொறுததுத் தகப்பன் மறுபடியும் மகனை நோக்கி, பிள்ளாய், இப்படி அழுமூஞ்சியாயிருப்பது மிகவும் கெட்டது. இந்தத் துர்க்குணத்தை விடாமற்போனால் நீ ஒருபோதும் முன்னுக்கு வரமாட்டாய். பார்ப்பவாகளெல்லாம அது மகா மூர்க்கம், அந்தப் பையனிடத்தில் நமக்கென்ன வேலையென்று சொல்லி உன்னைப் பழிப்பாாகள். இது உனக்குச் சிறிதும் தெரியவில்லையே என்றான். அதற்கும் அவன் வாயைத் திறவாமல் அழுதகண்ணும் சிந்தியமூக்குமாயேயிருந்தான். அதைப் பார்த்துத் தகப்பன், அடா மூடனே, நான் சொன்னபடிகேட்டுப் பாடம் படித்து ஒப்புவித்துவிட்டிருந்தால் இத்தனை வருத்தமில்லையே! தம்பியைப்போல நீயும் இந்நேரம் பழம்வாங்கித் தின்னலாமே; வீணுக்கெல்லாம் ஏன்-பிடிவாதம் பண்ணுகிறாய் என்று இதமாய்ச் சொல்ல, பையன் பழமென்பது கேட்டு மெல்ல வாயைத்திறந்து, தலைவிதி யாரை விட்டது, படவேண்டிய பாடெல்லாம் பட்டுத்தான் தீரவேண்டும் என நீரே பலதரம சொல்லியிருக்கிறீரே! என்று அதிகோபத்துடன் அழுகையோடு அழுகையாய் இதற்குமாத்திரம் பதில் சொல்லித் தீாத்தான். அதன்மேல் தகப்பனுக்கும் பிள்ளைக்கும் நடந்த ஸம்பாஷணையாவது:—

தந்தை: அப்படியா குழந்தாய்! அனுபவிக்கவேண்டிய கருமம் அனுபவித்துத்தான் தீரவேண்டுமென்று நானே சொல்லியிருக்கிறேனா?

மகன்: ஆம், பலதரம் சொல்லியிருக்கிறீரே! அது உண்மை தானே!

த. பிள்ளாய், நீ இப்படிப்பட்ட நுட்பபுத்தி உடையவனாயிருப்பதைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமுண்டாகிறது. நீ மற்றவர்களைப்போலல்ல; மிக்க விவேகமுள்ளவன். நல்லது, இப்பூமி

யில் மனிதனாய்ப் பிறந்தவன் கோபத்தையும், மூர்க்கம் முதலிய பல துர்க்குணங்களையும் விலக்கத் தன்னால் இயன்றவளவு முயற்சிசெய்ய வேண்டுமென்பது கடவுளுடைய கட்டளையென்றும், அப்படிப் பட்ட துர்க்குணங்களை நீக்கி நடக்க நாம் முயலவோமாயின கடவுளுடைய கருணை நம்மிடத்தில் அதிகமாய் உண்டாகுமென்றும் எப்பொழுதேனும் நான் சொல்லக் கேள்விப்பட்டிருபபாயா?

ம. பலதரம் கேள்விப்பட்டிருககிறேன்; ஆயினும், அது நம்மால் முடியாதகாரியம் என்பது எனனுடைய நினைப்பு.

த. அது மெய்தான். தன் தப்பைத் தானேயறிந்து திருத்திக் கொள்வது உனக்கேயன்று, அனைவர்க்கும் கூடாதகாரியமே. ஆனாலும் அதற்குத் தகுந்த வழியொன்று உனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று யோசித்தேன்; சொன்னபேச்சுக் கேளாதவனுக்கு எது சொல்லித்தான் பயனென்ன?

ம. ஐயா, அதென்ன வழி? கொஞ்சம் சொல்லுங்கள் பார்ப்போம்.

த. செவிடன்காதில் சங்கு ஊதி என்னபயன்? வீண் வருத்தந்தானே. அது அசாத்தியம் என்று நீ முன்னமே சொல்லி விட்டாய். இனிமேல் நான் எவ்வளவு சொன்னாலும எல்லாம் நடுக்காட்டில் அழுதவண்ணம் ஆகிவிடுமேயன்றி வேறில்லையே.

ம. என்னவோ, சொல்ல நினைத்த விஷயத்தைச் சொல்லுங்கள் பார்ப்போம். ஒருவேளை அது சாத்தியமென்றே தோன்றினாலாகாதா?

த. இப்பொழுது நான் உனக்குக் கருதிய நல்லவிஷயத்தைக் கேட்க மிகவும் ஆஸ்தை உடையவன்போல அபேகை்ஷகொண்டு நீ கேட்பதனால் உனக்கு அதைத் தெரியச்சொல்வது அவசியமேயானாலும, இப்பொழுது சொல்லமாட்டேன்; இன்றுமுதல் பதினைந்து நாள்வரையில சிறிதும் மூர்க்கத்தனமிலலாமலும மற்ற துர்க்குணங்கள் எதற்கும் இடங்கொடாமலும் நடந்துவருவாயானால், அதன்பின்பு அநத ரகசியத்தை உனக்குத் தெரியச்சொல்லுகிறேன்.

ம. அதை இபபொழுதே கேட்கவேண்டுமென்று எனக்கு அதிக அபேகை்ஷயாயிருககிறது. இதோ கையெடுத்துக்கும்பிடுகிறேன்; இனிமேல் நான ஒரு துஷ்டததனமும் செய்வதில்லை. அதை அவசியம சொல்லவேண்டும்.

த. நீ என்னைக் கும்பிடவேண்டாம், உன் கோபத்தைக் கும்பிட்டுக்கொள்; கோபத்தையும் மூர்க்கத்தையும் விடுவது அசாததியமென்றாயல்லவா? அது சாத்தியமே என்று உனக்குத் தோன்றுகிறவரையில் நான் சொல்லநினைத்த நீதிமொழியைச் சொல்லவேமாட்டேன்.

ம. ஐயா, நான் என்னால் கூடியவரையில் அதற்காகப் பிரயாஸபபடுகிறேன். விடாமுயற்சியாய்ச் செய்யும் காரியம் எதுவும்

கைகூடுமல்லவா? ஒருவேளை உடனே கைகூடாமற்போனாலும், சிலநாள் கழித்தாவது கூடிவருவதற்குத் தடையில்லையே.

த. நீ இனி இவ்விஷயத்தில் விடாமுயற்சி செய்கிறாய், மெய்தான். ஆனாலும நான் முன் சொன்ன முறைப்படியே பதினைந்து நாள்வரையில கோபம்முதலிய துர்க்குணங்கள் ஒன்றுமில்லாமல் நடந்துவந்தால்தான் அந்த ரகசியத்தை நான் உனக்குச் சொல்லக்கூடும; இல்லாவிட்டால் சொல்லக்கூடாது.

ம. ஆயின், ஏழெட்டு தினம்வரையில் முதலில் துர்க்குணம் ஒன்றுமில்லாமல் கிரமமாய் நடந்து, பின்பு ஏதாவது சிறிது கோபமுண்டானால் மறுபடியும் பதினைந்துநாள் போகவேண்டுமோ?

த. ஆம், மத்தியில் சிறிதும் விரோதமில்லாமல் பதினைந்துதினம் கிரமமாய் நடந்து காட்டவேண்டும்.

ம. ஆயின், அந்த நியமத்தை நான் நாளைமுதல் வைத்துக்கொள்கிறேன். இன்றைக்குக் கொஞ்சநேரம் மனம்போனபடி திரிந்துகொண்டிருக்கும்படி செலவுகொடுக்கவேண்டும்.

என்று இவ்விதமாகப் பேச்சாடிக் கடைசியில், செய்யவேண்டிய காரியம் இன்னதெனத் தெரிந்துகொண்டு அந்தப் பையன் இரண்டு மூன்றுதினம்வரையில் எவ்வளவோ கிரமமாய் நடந்துவந்தான். நாலாநாள் அவன் தம்பி ஒருவன் பரிகாசமாய், இன்றையதினம் சாப்பிடும்போது அண்ணன் செய்த சேஷ்டைகளைச் சொல்லிமுடியாது என்றான். அந்தப் பேச்சைக் கேட்டவுடனே அவன் கண் சிவந்து உதடு துடிக்கத் துடிக்கத் தம்பியை நோக்கி: அடே, துஷ்டா என்மேல் இல்லாத பழியெல்லாம் சொல்ல நீ ஒரு பாதகன் ஏற்பட்டாயா! உனக்கென்ன, கேடுகாலம் கிட்டினதாவென்று அவனைத் திட்டிக்கொண்டே அழ ஆரம்பித்தான். அதைப் பார்த்துத் தகப்பன் ஆ, சரி, இதுதான் சரி, நன்றாயிருக்கிறதென்றான். அழுதுகொண்டிருந்த பையன் அதன் கருதது இன்னதெனத் தெரிந்துகொண்டு வெட்கமடைந்து தன்னை மறந்து வந்துவிட்ட கோபத்தை மெல்லமெல்ல அடக்கிக்கொண்டான். இரண்டு மூன்று தினங்களுக்குப்பிறகு ஒருநாள் காலையில் மழைபெய்து குளிர்ச்சியாயிருக்கும்போது அச்சிறுவன் பாடம்படியாமல் பூஞ்செண்டுகள் கட்டிவைத்துக்கொண்டு விநோதமாய் விளையாடிக்கொண்டு பொழுதுபோக்கவேண்டுமென்று எண்ணியிருந்தான். அதற்கு விரோதமாக அப்போது வேலைக்காரியொருத்தி அவனிடம் வந்து, இன்றையதினம் உங்கள் தகப்பனார் உன்னையும் தம்பியையும் எங்கேயோ அழைத்துக்கொண்டு போகப்போகிறாராம். வீட்டுவாயிலில் காத்துக்கொண்டு நின்று கூப்பிடுகிறார் வாவென்று அழைத்தாள். அதுகேட்டு அச்சிறுவன் மிகவும் கோபித்துக்கொண்டு, இன்றைக்கு நான் எங்கேயும் வரமாட்டேன்; அப்படி அவசி

யமாயிருந்தால் தம்பியைமாத்திரம் அழைத்துக்கொண்டு போகட்டும் போவென்றான். வேலைக்காரி அதைக் கேட்டுக்கொண்டு திரும்பிப்போகாமல் சற்றே நிதானித்து நின்று, வீட்டிலிருந்து நீ செய்யவேண்டிய காரியங்களெல்லாம பிறகு போய்வந்து செய்து கொள்ளலாம் வாவென்று வேண்டியழைக்க, அவன் அவளைத் திட்டி நான் நினைத்தகாரியத்தை முடிக்காமல் மற்றொன்றுக்குப் போவதில்லையென்பது உனக்குத் தெரியாதுபோலும் என்று சொல்லிக் கொஞ்சம் தளர்ந்துபோயிருந்த பூஞ்செண்டை உறுதியாய் இழுத்துக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தான். வேலைக்காரி, நல்லது ஆகட்டும், அப்பாவையே நேராக வரச்சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு மறைந்தாள். அதுகேட்டு அந்தப் பையன், இதென்ன பீடை, இப்படிப்பட்ட தகப்பன் இருப்பதினும் இல்லாமையே மேலல்லவா என்று அண்டையில் இருப்பவர்களுக்குக் கேட்கும்படி கெட்டியாய்த் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். இந்த வார்த்தை அவன் வாயைவிட்டு வெளிப்படுவதற்குமுன்னமே அதைக் கேட்டுக்கொண்டே தகப்பன் அவனிருக்கும் அறைக்குள் வந்து பார்த்து, இன்னும் இந்தத் துஷ்டச்சுபாவம் உன்னைவிட்டுப் போகவில்லையல்லவா என்று சொல்ல, பையன் மிகவும் முகம் சிறுத்து வெட்கமடைந்து, இன்றையதினம் நான் எங்கும் போகக்கூடாதென்று நிச்சயம்பண்ணிக்கொண்டிருக்கிறேன், என்னை ஏன் இப்படி நிர்ப்பந்திக்கிறீர்கள் என்றான்.

தகப்பன் அதுகேட்டு, வேலைக்காரியோடு நான் உன்னை அழைத்துக்கொண்டு வரும்படிமாத்திரம் சொல்லியனுப்பினேனேயல்லது, வீட்டிலிருக்கப்போகிறாயா அல்லது என்னுடன் வெளியே வரப் போகிறாயாவென்று கேட்டுக்கொண்டுவரும்படி சொல்லியனுப்பவில்லை. என் கருத்தென்னவெனின், இன்று மழைபெய்து குளிர்ந்திருப்பதால் சிறிதுநேரம் விநோதமாய் வெளியே போய் உலாவித் திரிந்துவிட்டு வரலாமென்பது. இது உனக்குச் சந்தோஷமான காரியமேயன்றி வேறொன்றுமல்லவே. இதில் என்னவருத்தமிருக்கிறது என்று சொல்லி, இவனைத் தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டு வாவென வேலைக்காரிக்குத் திட்டஞ்செய்து தான்முன்னே போனான்.

மூர்க்ககுணம் அதிகரித்தவனான அச்சிறுவன் தகப்பன் சொல்லிப்போனது கேட்டு "உஸ், புஸ்" என்று சீறிச் சினந்து வேலைக்காரி கொண்டுவந்து கொடுத்த நல்ல உடுப்பை வாங்கித் தரித்துக்கொள்ளாமல் அப்பொழுது உடுத்திக்கொண்டிருந்த அழுக்குத்துணியையே சரிப்படுத்தி உடுத்திக்கொண்டு, கால்களுக்கு அணிந்துகொள்ள நல்லதாய்ப் பாதரக்ஷையொன்று கொண்டுவர, அதுவும் வேண்டாமென்று கிழிந்த பழைய பாதரக்ஷையொன்றைக் காலில் மாட்டிக்கொண்டு தான் உட்கார்ந்திருந்த அறையைவிட்டெழுந்து மெல்ல

மெல்ல வெளிப்பட்டான். தகப்பன் அப்பொழுது அவன் முகம் சிவந்து மிகக் கோபமாயிருப்பதையும், அவன் தொப்பு தொப்பு என்று அடியெடுத்துவைப்பதையும் பார்த்தும், குழந்தாய், நீ இந்தப் பழைய பாதரக்ஷையைத் தரித்துக்கொண்டு நடந்துவரமாட்டாய், இதை யெறிந்துவிட்டு உன் புதுப் பாதரக்ஷையைக் காலில் தரித்துக்கொண்டு சீக்கிரம் வாவென்று அவனைத் திரும்பிப் போகச் சொன்னான். அதைக் கேட்கவே, அச்சிறுவனுக்கு எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினதுபோல முன் கொஞ்சமாயிருந்த கோபாக்கினி அதிகமாய் ஜொலித்தெரிய ஆரம்பித்தது. அதை அடக்கமுடியாமல் அவன் கோவென்று அழத்தொடங்கினான்.

தகப்பன் அதைப் பார்த்து அப்போது உலாவப்போவதை நிறுத்தி அவனுடன் ஒன்றும் பேசாமல் வீட்டுக்குத் திரும்பிவிட்டான். அன்று மாலைப்பொழுதில் யாவரும் விநோதமாய் உட்கார்ந்திருக்கும் சமயத்திலே தகப்பன் மகனைப்பார்த்து, பிள்ளாய், நீ சரியாக நடந்துகொண்ட ஆறுதினங்களையும் எலியிழுத்துக்கொண்டுபோய்விட்டதே என்று சிரித்தமுகமாய்ச் சொல்ல, பையன், அப்பா, அந்த தினங்கள் போனால் போகட்டும்; என்மேல் கோபித்துக்கொள்ள வேண்டாம்; இன்றுமுதல் சரியாக நடந்துகொண்டுவருகிறேன் என்று வணக்கமாய் வேண்டிக்கொண்டான். அதற்குத் தந்தை, சொன்ன பேச்சுத் தவறுவது யார்க்கும் சரியானதன்று; அப்படியே நீ நாளைமுதல் பதினைந்துநாள் சரியாய் நடந்துவரவேண்டும் என்று கூற, மகன் அதற்குச் சம்மதியாமல், கழிந்த ஆறுநாள்போக மிகுந்த ஒன்பதுநாள்மாத்திரம் பார்க்கவேண்டும் என்று வெகுநேரம் அழுதும் இரைந்து பேசியும் பார்த்தான்; அதற்குத் தந்தை உடன்படவில்லை.

பின்பு ஒரு சமயத்திலே தந்தை மகனைப்பார்த்து, குழந்தாய், இந்த மூர்க்ககுணத்தை நீ விட்டுவிடும்படியாக உன்னை அனுக்கிரகிக்கும்படி நாம் கடவுளைப் பிரார்த்திப்போம். ஸ்வாமியின் அனுக்கிரகம் உண்டாகுமாயின் மூர்க்ககுணம் இப்படி உன்னை வருத்தாது என்று உரைக்க, மகன், ஸ்வாமியின் அனுக்கிரகம் எதுக்கு? நானே வேண்டிய முயற்சிசெய்து, இந்தத் துர்க்குணங்களை மெல்லமெல்ல மாற்றிவிடுகிறேன் என்று பதில் உரைத்தான். தகப்பன், அதற்கு அப்போது ஒன்றும் ஆக்ஷேபம் சொல்லாமல் சரிதான் என்று சம்மதித்து, அதற்குப்பின்பு இரண்டு மூன்றுதரம் பிள்ளையைப் பரீக்ஷித்துப் பார்த்து, அவன் மூர்க்கக்குணத்தைப் போக்கடித்துக்கொள்வதைத் திருஷ்டாந்தத்தின்மூலமாகத் தெளிவாய்த் தெரிவித்து, மன்னுயிர்களுடைய முயற்சி எவ்வளவு இருந்தாலும் தெய்வசகாயமில்லாவிடின் எந்தக்காரியமும் கைக்கூடாதென்னும் உண்மையை அவனுக்கு நன்றாய்ப் போதித்துப் பெரியோரிடத்திலும் கடவுளிடத்திலும் பக்தியுண்டாகும்படிச் செய்தான். அச்சிறுவனும் "தந்தைசொன்

மிக்க மந்திரமில்லை." எனநினைத்து அவன் பேச்சைக்கேட்டு அது முதல் அந்த நல்வழியைக் கைப்பற்றி மெல்லமெல்லத் தன் மூர்க்க குணத்தை விடத்தொடங்கினன். கோபகுணம், இனி நாம் இவனிடத்திலிருந்தால் முதலே கொலைசெய்யப்படுவோமென்று பயந்து தானே ஓடிப்போக வழிபார்த்தது.

அதன்பின்பு தகப்பன் பிள்ளையை மிகவும் கொண்டாடி அப்போதப்போது தக்கசமயங்களில் அவனுக்கு வேண்டிய நற்புத்திகள் போதித்துவந்தான். அவற்றைப் போதித்து வருங்காலங்களில், இதுதான் நான் உனக்குச் சொல்லநினைத்த ரகசியமாவது; இது அவசியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியவிஷயமோ அல்லவோ, நீயே இப்போது நன்றாய் யோசித்துப்பார் என்று சொல்ல, உண்மைதானென்று அவன் அதை அங்கீகரித்து அதன்பிறகுதந்தை சொற்படி கேட்டு நடந்துவந்தான்.

சொன்னசொற்கேட்டு நடக்கின்ற நற்புத்தியுண்டாகவே தந்தை அதிக சந்தோஷமடைந்து, அம்மகனுக்கு அடிக்கடி பின்னும் பல நல்லவிஷயங்களை எடுத்து உபதேசம் செய்யத்தொடங்கினன். அவற்றைக் கேட்கக் கேட்க அவன் மிகுந்த பொறுமையுடையவனுக் கடைசியில், தனக்கு நேராய் அபகாரம் செய்தவனிடத்திலே கூடக் கோபங்கொள்ளாமல் எவருக்கும் தன்னால் இயன்றவளவு உபகாரமேசெய்துகொண்டு, இத்தன்மையான உத்தமபுருஷன் உலகில் வேறுண்டோவென்று யாவரும் கொண்டாடத்தக்கவனுயினன். அதுகண்டு அவனுடைய தாய்தந்தையர் பந்துமித்திரர் முதலிய யாவரும், அப்படிப்பட்ட மூர்க்ககுணம் போய் இவனும் உலகத்தாரோடு ஒரு மனிதனுவானு என்று நாம ஸ்வாமியைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தோமே; இப்போது யாவரும் அதிசயிக்கத்தக்க உத்தம குணங்களுள்ளவனுயினனல்லவாவென்று மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

"தெய்வத்தா லாகா தெனினு முயற்சி
மெய்வருத்தக் கூலி தரும்."

பூனையைப்பற்றி.

இக்காலத்திலே பூனைகளினிடத்தில் அன்புபாராட்டுவார் அதிகமில்லை. நம்மோடுகூடவே வீட்டில் பழகிக்கொண்டிருக்கிற முக்கியமான பிராணிகளுள் எல்லாப் பெருமையும் நாய்களுக்கே நடத்தப்பட்டுவருகின்றன. நாயின் மகிமைகளையும், விவேகத்தையும், நன்றியறிவையும்பற்றி உண்மையான கதைகள்மாத்திரமேயன்றிப் பற்பல விசித்திரமான கட்டுக்கதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அங்கிலேய சரித்திரக்காரர்கள் பலர் தங்களுக்குள்ள திறமைகளை

யெல்லாம் நாய்களின் நற்குணங்களை வர்ணிப்பதிலேயே வினியோகப்படுத்தி, ஐயோ பாவம்! பேதைப்பிராணியாகிய பூனையை முற்றும் அலக்ஷியஞ்செய்திருக்கிறார்கள். எவ்வளவு அருமையாக வளர்த்துவந்தாலும் பூனைகளுக்கு மோசநினைவுமாத்திரம் போவதில்லையென்பார்கள். அதற்கேற்றவையாய்ச் சில கதைகளும் சொல்வதுண்டு: ஒருவன் வீட்டில் ஒரு பூனை அதிக அன்புடன் வளர்க்கப்பட்டுவந்தது. அவ்வீட்டில் எலியுபத்திரவம் அதிகமானதால் அவைகளைப் பிடிக்கும்படி பண்டம் பலகாரங்கள் வைத்திருக்கும் அறைகளுக்குள்ளும் தாராளமாய்ப் பூனை போய்வரும்படி சம்மதித்திருந்தனர். அப்படியிருக்க ஒருநாள் பூனை அங்கே வைத்திருந்த பணியாரங்களைப் பார்த்து அதைத் தின்னவேண்டுமென விருப்பங்கொண்டு, எலிகள் தின்றுவிட்டதாக வீட்டுக்காரர் நினைத்துக்கொள்ளட்டும் என்று எண்ணி முதலில் கொஞ்சம் உருசி பார்க்கப்போய்ப் பின்பு, உருசிகண்ட பூனை உறியைப் போய்த் தாவும் என்றவண்ணம் இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாய்த் தன் வயிறுநிரம்பத் தின்று எல்லாப் பண்டங்களையும் பாழாக்கி விட்டது என்று ஒருகதை சொல்லுகிறார்கள்.

இத்தன்மையாகத் துர்க்குணங்களைக் காட்டும் கதைகள் இருந்தாலும், பூனைகளிடத்தில் நற்குணங்களுமுண்டு; அவற்றின் நற்குணங்களையும் விவேகத்தையும் விளக்குகின்ற கதைகளும் இருக்கின்றன. பூனைக்குப் பழகினவிடத்தில் பற்று மிகவும் அதிகம்; ஒருவரோடு கூடிப் பழகினால் பின்பு ஒருபோதும் அவர்களைவிட்டுப் பிரியாது. எப்படிப்பட்டவர்களுக்கும் இந்த நற்குணம் அமைவது கடினமானது.

முன்னே ஒரு பூனையும் குதிரையும் அதிக அந்நியோந்நியமாய் வெகுகாலம் கூடிக் கொண்டாட்டமாயிருந்தன. இப்படியிருக்க ஒருநாள் குதிரை வலிகண்டு இறந்துபோயிற்று. அதுதெரிந்து பூனை அதிக விசனமடைந்து அந்தப் பிரேதத்தை விடவேயில்லை; அதை அடைக்கலஞ்செய்யுமளவும் அதன்மேலேயே விழுந்து புரண்டு கொண்டிருந்தது. அடைக்கலஞ்செய்தபிறகு அது மிகவும் சோர்ந்து தளர்ந்து மெதுவாய் அவ்விடம்விட்டு நகர்ந்து எங்கேயோ போய் விட்டது. பின்பு அந்தப் பூனையைக் கண்டவர் ஒருவரும் இல்லை. சில நாளைக்குப்பிறகு ஏதோ ஒரு மாத்தடியில் செத்துப்போய்க் கிடந்ததாம். இவ்விதமாய்க் கூடவே உயிரைவிடும்படியான நேசம்பாராட்டுவது எவ்வளவு உத்தமமானது! அடியில் குறிக்கும் கதையினால் பூனையின் விவேகம் இத்தன்மையதென விளங்கும்.

பிராஞ்சுதேசத்தில் இருக்கும் ஒரு சந்நியாசிமடத்திலே வளர்க்கப்பட்ட பூனை ஒன்று மாணாக்கர்க்குப் போஜனகாலம் தெரிவிக்கும்படி மணியடிக்கும் ஓசைகேட்டுத் தானும் போய்ப் பந்தியில் உட்கார்ந்து போஜனஞ்செய்வது வழக்கமாம். இப்படி ஒருநாள்

வரையில் சிறிதும் தவறாமல் நடந்துவந்தது. ஒருநாள் ஏதுகாரணத்தாலோ அப்பூனை அறைக்குள்விட்டுப் பூட்டப்பட்டிருக்கையில் பகற்போஜனத்திற்கு மணி அடிக்கப்பட்டது. அதுகேட்டுப் பூனை பரபரப்புடன் கதவைத் தட்டிப் பிறாண்டித் திறக்க வகைபார்த்தும் முடியாததனால், வயிறு கொதிக்ககொதிக்க உறுமிக்கொண்டிருந்தது. அப்புறம் ஒருவன் பூனை காணாதபடி கதவைத் திறந்துவிட்டுப்போய் மறைந்தான். உடனே அது வெளிப்பட்டுப் போஜனஸ்தானத்திற்கு விரைந்தோடியது. வழக்கமான இடத்தில் போஜனத்தைக் காணவில்லை. காணாமற்போகவே பூனைக்குப் பசி தீபோல மூண்டு எரிய, போஜனம் கிடைக்காததுபற்றிக் கண்ணினின்றும் பொறிபறக்கும்படி கோபம் உண்டாக, அது பல்லைக் கடித்துக்கொண்டு சற்றுநேரமட்டும் படுத்திருந்தது, அப்புறம் இரவில் புசிக்குங்காலம் வருமுன்னமே எழுந்து ஓடி மணிக்கயிற்றைத் தன் வாயினால் கௌவி இழுத்து அடித்தது. அடிக்கவே மணி கணீல் கணீலென்று சப்தித்தது. இப்பொழுது என்னகாரியத்திற்கு மணி அடிக்கிறதென்று வெளிப்பட்டு மாணாக்கர் மணிக்கயிற்றின் பக்கத்தில் வந்து பார்க்க, அங்கே பூனை நிற்கக்கண்டு அதன் விவேகத்தைப் பார்த்து வியப்புற்று அதற்குப் போஜனம் கொடுப்பித்தார்கள்.

இத்தேசத்து வியவஸாயம்.

இத்தேசத்தில் இப்போது வியவஸாயமானது மற்றத் தொழில்களைப்போல் அத்தனையாக விருத்தியடையாதிருப்பது பெருங்குறையாயிருக்கின்றது. அது இந்தியாவெங்கும்முற்காலத்திலிருந்த வளத்துக்கேற்றபடி இக்காலத்தில் ஓங்கி விருத்தியாகுமளவும், பொருள் வருவாயின் ஆதாரமானது பலமுற்றதென்று சொல்ல இடமில்லை. சம்பத்துக்கள் பலவற்றுள்ளும் சிறந்தது தானியசம்பத்து என்பது ஜெகப்பிரசித்தம். பொன் வெள்ளி முதலிய உலோகங்களும் நவரத்தினங்களும் குவியல்குவியலாக இருந்தாலும் தானியம் இல்லாதபோது அவையென்ன பயன்பெறும்? அவைகளை மாற்றியல்லவோ தானியங்களும் உணவுக்குவேண்டிய மற்றப்பதார்த்தங்களும் கொள்ளவேண்டும். தானியம் எங்கும் கிடைக்காதகாலத்தில் பொன்முதலியவை இருந்தென்னசெய்யும்? ஆபரணவடிவங்களாக மேலணிந்துகொள்ள உபயோகமாகுமன்றி உயிர்நிலைத்து வாழ்வதற்காகுமோ? ஆகா. பொன் முதலியவை இல்லாதகாலத்தில் தானியம்மாத்திரம் இருந்தால், உணவால் உயிரை நிலைநிறுத்தக்கூடும்; பொன்முதலிய எல்லாச் செல்வங்களையும் பெறக்கூடும். வச்சிரம் வைடூரியம் முதலிய நவரத்தினங்கள் அளவற்றிருந்தாலும்

அவைகளை சீவரத்னமாகிய தானியம் ஒன்றுக்கு ஒப்பிட்டுக் கூறலாமோ? தானியசம்பத்தானது ஒப்புயர்வில்லாத உத்தமமான சம்பத்தாகும். இவ்வுயர்ந்த சமபத்தை நாம் எப்போதும கிருஷித் தொழிலால தேடிப்பெறுதலன்றோ உயிர்தரிதது வாழ்வதற்கு ஆதாரமாகும்.

இந்த சம்பத்தைத் தரவல்லது வியவசாயமாதலால் இத்தொழிலை நாம் மறந்து வேறு பல வர்ததகங்களிலே நோக்கமவைப்பதெல்லாம் நமக்குக் கேட்டை உண்டுபண்ணுவதாகும். பல வர்த்தகங்களிலும் சிறந்தது வியவசாயவர்த்தகம. குடித்தனங்கள் இதனை மறந்து முயலாதிருப்பது உயிரை மறந்ததொப்பாகும். வியவசாயம் குறைந்தால்தான் நாட்டில் பஞ்சமுண்டாவதெனபதை அனுபவமாய் அறிந்திருந்தும் பஞ்சமுண்டாகாதபடி பயிர்த்தொழிலைச் சிரத்தையுடன் நம்மவர்கள் நடத்தாதிருப்பது கொடிது! கொடிது!! பூஸ்திதியுடைய ஒவ்வொருவரும் வியவசாய வர்த்தகத்தையே பெரிதாகக்கருதி மற்ற வர்த்தகங்களுக்காகப் படும்பாட்டையெல்லாம் இதன்பொருட்டாகப் பட்டு, நீர்வளம் தாழ்வுபடாதபடி அதற்குத் தக்க ஏற்பாடு செய்துகொண்டு, கிருஷிமுயற்சியிலேயே பெருஞ் செல்வத்தை அடையலாமென்னும் நோக்கத்துடன் கட்டிக்காததிருந் தால, தாழ்வு எப்போதும் உண்டாவதில்லை.

பஞ்சம உண்டாவதெல்லாம் உணவுக்குத் தாழ்வு வந்தபோதன்றி, பொன் வெள்ளிமுதலிய உலோகங்களுக்கும் மற்றப் பதார்த்தங்களுக்கும் தாழ்வுவந்தபோதல்ல. உணவுககு வேண்டியபொருள் தானியவகைகளாம். ஆதலால் தானியவகைகளில ஒவ்வொரு பயிர்தொழிலாளியினிடத்திலும் இரண்டு அல்லது 3 வருஷதது உணவுககு வேண்டிய தானியங்கள் களஞ்சியங்களில் இருக்கவேண்டியது அவசியமாம். பல பெருத்த மிராசுதாரர்களிடததில் 4 வருஷத்துக்கு வேண்டிய தானியம்கட்டுக் கிடையாயிருப்பதைத் தென்னாட்டில் யாம் கண்டிருககின்றேம். பஞ்சம் இவ்வகைப்பட்டவர்களை என்னசெய்யும்? வியவசாய நேசர்களே! கேளுங்கள்: பயிர்த்தொழிலை விருத்தியடைந்து சமபன்னாகளாயிருக்க நினைத்தால், வர்ததகன் பொருளினபேரில வைதத நோக்கத்தால் சரக்குகளைக் கெட்டுபபோகாமல் பத்திரப்படுத்தி வைத்திருபபதுபோல, பயிரத்தொழிலுக்குவேண்டிய சாதனமாயுள்ள கருவிகளைப் பாதுகாப்பது இன்றியமையாத் தொழிலாக நினைக்கவேண்டும். ஆதலால் கண்டுமுதலாகிற தானியததில், 1 பாகம் விவசாயமுதலாகவும், 1 பாகம் வித்து ஆள்மாகாணம் கூலியாட்களுக்குதவும் முதலாகவும், 1 பாகம உணவுக்காகவும், 1 பாகம் எதிர்காலத்தைநோக்கிய ஆஸ்தியாகவும் கணக்கிட்டுப் பிரிவின்படி உபயோகித்து வருவது நலமென அனுபவமுதிர்ந்த அமெரிக்காதேச விவசாயக்காரர் ஒருவர் எழுதியிருககின்றனர். இந்நான்குபாகத்தில் 1-ம்பாகத்

தினால் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தீர்வையைச் செலுத்து வதும், நிலங்களை வருடப் பிரதிவருடமும் திருத்திப் பண்படுத்தி வைப்பதும், மாடுகள் இளைக்கக்கண்டால் அவைகளை விற்று நூதனமாய் மாடுகள் பிடிப்பதும், மற்றும் அவ்விஷயத்திற்கு வேண்டிய முயற்சிகள் செய்தலும் கூடும். 2-ம் பாகத்தினால் வித்துகளைச் சேர்க்கவும், ஆள்மாகாணங்களைத் தளாவின்றிக் கூலிகளைக் கொடுத்துக் காப்பாற்றவும் கூடும். 3-ம் பாகத்தினால் உணவுக்குவேண்டிய அளவும், துணிமணிமுதலிய மற்ற உபயோகமான காரியங்களும், தானதருமங்களும் அமைக்கக்கூடும். 4-ம் பாகத்தினாலே தான் குடிவளஞ் சிறககத்தக்க ஆஸ்தியமையக்கூடும்.

இவ்வண்ணம் நாம் கவனித்து நமது வியவசாய வர்த்தகத்தை நடத்துவோமானால் நண்பர்களே! நமக்குத் தாழ்வு உண்டாகுமோ? யோசியுங்கள்.

கடற்பாசி.

அடிக்கடி சொற்பமாய்த் தண்ணீரைக் கையாளவேண்டிய தொழிலாளிகளும் விரணவைத்தியர்களும் மற்றவர்களும் அதிகமாய் உபயோகப்படுத்துகின்ற ஒருவகைக் கடற்பாசியை அநேகர் பார்த்திருக்கலாம். அந்தப் பாசியானது சிறுசிறு ரந்திரங்கள் அடர்ந்ததாகி அவற்றுள் வேண்டிய நீர் ஏற்றுக்கொள்ளும் இயற்கையுள்ளதாய் இருக்கின்றது; இது கடலில் ஒருவகைப் பாசிபோல் அகப்படுவதால் இதற்குக் கடற்பாசியென இத்தேசத்தார் பெயரிட்டிருக்கின்றனர். அங்கிலேய பாஷையில் இதற்கு ஸ்பஞ்சு எனப் பெயர்வழங்குகின்றது.

பிராணனுள்ள ஜந்துக்களைப் பூண்டுவகையென்றாயினும், பூண்டுகளைப் பிராணியென்றாயினும் சொல்வது நியாயமல்லவே! ஆயினும், சில பூண்டுகள் ஏறக்குறைய பிராணிகளைப்போலவேயிருக்கின்றன. அவை பிராணிவாக்கத்தில் சேர்ந்தனவா, பூண்டுவாக்கத்தில் சேர்ந்தனவா என்பது நிச்சயமாய்த் தெரியாமல் தத்துவவிசாரஞ்செய்யும் பெரியசாஸ்திரிகள்கூடச் சிலர் இதைபபற்றி விவாதப்பட்டிருக்கிறார்கள். இப்படி விவாதத்திற்கு இடமான பொருள்களுள் இந்தக் கடற்பாசியும் ஒன்று. யோசித்துப்பார்க்குமளவில் இக்கடற்பாசி பிராணிவகையிலும் சேராமல பூண்டுவகையிலும் சேராமல் இவ்விரண்டுக்கும் நடுத்தரமாயிருக்கின்றது. இது கடலில் உற்பத்தியாகிற ஒருவகைப் பூண்டென்றே பலவருஷங்களாகக் கருதப்பட்டுவந்தது. இப்பொழுது சிலகாலமாய், இது அசையும் திறனில்லாத ஒருவகைப் பிராணியெனவும், நத்தை சிப்பிமுதலிய

வற்றிற்குள்ள அறிவினும் குறைவாய் அணுவள்வு அறிவு உள்ள தெனவும கல்விமான்கள கண்டறிநதிருக்கிறார்கள்.

கடலின் அடிப்புறததிலுள்ள பாறைகளோடு ஒட்டி இது உற்பத்தியாகின்றது; ஒருவகைக் கம்பளிவாணமுள்ளது. முதலில் அங்கிருநது பெயாத்தெடுக்குமபோது அதிகமான பளுவும ஒருவிதமான கெட்ட நாற்றமுமுடையதாய் இருககும. அதற்குள் சளிபோன்ற வழவழப்பான திரவபபொருள ஒன்று நிறைநதிருக்கின்றது. கடற்பாசியினின்றும பிழிந்தால் நீளமாய்க் கமபிபோல் அந்தச் சளி கீழே பெருகும். கடற்பாசியின்மேலுளள ரந்திரங்களெல்லாம் மூட்டுப்பூச்சிபோன்ற சிறுசிறு கடற்பூசசிகள் புகுந்துகொண்டிருக்கும்; ஒரு அங்குலம இரண்டு அஙகுலம் நீளமுள்ள சிவப்புநிறமான சில பூச்சிகள் அதற்குள் அதிக ஆழத்திலேபோய்ப் புகுந்துகொண்டிருப்பதுண்டு. கடற்பாசிக்குள் அபபடிப்பட்ட சளி இருப்பதன்பயன் என்னவோ, அது இன்னம் எவர்க்கும் தெளிவாய்த் தெரியவில்லை; ஆயின் ஒன்று—அந்தத் திரவப்பொருளை எடுத்து அசைவற்றிருக்கும தண்ணீரில் அடிப்புறததிலே விட்டால் அதினின்றும் புதிதாய் வேறு கடற்பாசி உற்பததியாகிறதென்றும், அப்படி உயிரோடிருக்கின்ற கடற்பாசிகளுள் வெவ்வேறான இரண்டு துண்டைக் கொண்டுவந்து கடலின் அடிப்புறததில் ஒன்றின்பக்கத்தில் ஒன்றாகச் சேர்த்துவைத்தால் இரண்டும் ஒன்றாய் ஒட்டிக்கொள்கிறதென்றும் கண்டறிந்திருககிறார்கள்.

இந்தப் பாசி கடலிலே பலவிடங்களில் அகப்படுகின்றது. அவற்றுள் மத்தியதரைக்கடலில் உற்பத்தியாவது சிறந்தது; குளிகாரர் கடலில் மூழ்கி அதை வெளியே கொண்டுவருகின்றனர். அவைகளில முதல்தரமானது விரணவைததியம் முதலியவற்றிற்கு உபயோகப்படுவதாகையால், ஒரு ராததல் எடையுள்ளது 100 அலலது 200 ரூபாய் விலைக்கு விற்கப்படுகின்றது.

பாஹமா தீவுக்குச் சமீபத்திலும் பவளக்கொடிகள் அடர்ந்த விடங்களிலும கடற்பாசி மிகுதியாய் அகப்படும். அதைச் சேகரிப்பவர்கள் படவுகளில் ஏறிக்கொண்டு கடற்பாசியிருக்குமிடத்தை நிதானிததுப் போவார்கள். படவின் மேற்புறத்திலிருந்து தண்ணீருக்குள 40 அடி ஆழம்வரையில் காணக்கூடிய பூதக்கண்ணாடிகளுண்டு. அந்தக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு படவின மேல்தளத்தில் படுத்தவண்ணமாய் அந்தத் தொழிலாளிகள் கடற்பாசியிருக்கும் இடத்தைப் பார்த்துக்கொண்டே போவார்கள். அவ்விடம் காணப்பட்டவுடனே கடலில் மூழ்கியாயினும, நுனியில் பாசியைப் பறிப்பதற்கேற்ற கருவியோடுகூடிய ஏறக்குறைய ஐம்பதடி நீளமுள்ளதான ஒரு மெல்லிய தடியைத தண்ணீருக்குள் போட்டாயினும் ,கடலின் அடிப்பாறையில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாசியைப் பறிப்பார்கள். வழக்கத்தினால் அத்தொழிலாளிகளுடைய



LORD DUFFERIN.—லார்ட்டு டப்ரின் பிரபு.